Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk


தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, AUGUST 7, 2021

சனிக்கிழமை ஒகஸ்ட் 07, 2021 | ஒளி: 07 கதிர்: 68 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

## டெல்டா தொற்று 117ஆக உயர்ந்தது




நாட்டில் டெல்டா வைரஸ் பிறழ்வுகளுடன் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 117ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P12

# ‘நாட்டை முடக்க மாட்டேன்’



கொரோனா வைரஸ் வியாபித்திருக்கும் நிலையில், நாட்டை முழுமையாக முடக்கமாட்டேன் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நிலைமையைக் கவனத்தில் எடுத்து, தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் பணித்தார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (06) நடைபெற்ற கொவிட்-19 தொற்றொழிப்பு ஜனாதிபதி செயலணியின் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, மேற்கண்டவா[illegible]ர்.

தொடர்ச்சி P12

சுற்றறிக்கைகளில்

# மீளவும் திருத்தும்

- மரணவீடுகளில் 25 பேர் பங்கேற்கலாம்
- அரச ஊழியர்களை அழைப்பதில் திருத்தம்
- திருமணத்தில் பங்கேற்க கட்டுப்பாடு
- அரச விழாக்கள் ஒத்திவைப்பு

நாட்டை முழுமையாக முடக்காது கட்டுப்பாடுகளைக் கடுமையாக்கி, ஏற்கெனவே தளர்த்தப்பட்டிருந்த தளர்வுகளை இறுக்கமாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற கொவிட்-19 தொற்றொழிப்புச் செயலணியின் வாராந்த கூட்டத்திலேயே, மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகுவோரின் எண்ணிக்கை அதிகரித்து இருந்தாலும் நாட்டை முழுமையாக முடக்கமுடியாது. எனினும், மக்களைத் தெளிவூட்டும் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி, சுகாதாரப் பிரிவினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P12



# எசல பெரஹரா நாளை ஆரம்பம்

மொஹொமட் ஆஸிக்

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை மற்றும் நான்கு தேவாலயங்களின் எசல பெரஹரா, காப்புக் கட்டல் நிகழ்வுடன் நாளை (08) ஆரம்பமாகும் என தலதா மாளிகையின் தியவடன நிலமே பிரதீப் தேல தெரிவித்துள்ளார். வருடா வருடம் பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறும் சரித்திரப்புகழ் பெற்ற இந்நிகழ்வானது, கொவிட்-19 தொற்றுக் காரணமாக, சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி,

தொடர்ச்சி P12

# வங்கிக்குச் சென்ற பெண் உரப்பைக்குள் சடலமாக மீட்பு

## வாழைச்சேனையிலேயே சம்பவம்

எச்.எம்.எம்.பர்ஸான், கனகராசா சரவணன், ஆர்.ஜெயஸ்ரீராம்



வாழைச்சேனை பொதுச் சந்தையில் அமைந்துள்ள கடை ஒன்றில் இருந்த உரப்பையில் பெண்ணொருவரின் சடலம், நேற்று முன்தினம் (05) இரவு மீட்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். சடலமாக மீட்கப்பட்டவர் வாழைச்சேனை,

தொடர்ச்சி P12



# எம்.பிக்கள் மூவருக்கு கொரோனா உறுதி

பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஹம்பாந்தோட்டை, பதுளை, மாத்தளை மாவட்டங்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதன்படி, ஹம்பாந்தோட்டை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான திலிப் வெதஆராச்சி, பதுளை மாவட்டத்தின் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சிக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தொடர்ச்சி P12

# ‘மரணிப்போர் மரணிக்கட்டும் எனும் நிலையில் இருக்கிறது அரசாங்கம்’



பா.நிரோஸ்

ஜனாதிபதியும் பிரதமரும் தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டுள்ளார்களா? எனக் கேள்வி எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான், ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் செலுத்தப்பட்ட தடுப்பூசி வகை என்ன என்றும் வினவினார்.

தொடர்ச்சி P12




# தொழிற்சங்க சம்மேளனம் விரைவில் உதயம்

மலையக மக்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தமிழ் முற்போக்குக் கூட்டணி என்பன இணைந்து, தொழிற்சங்க சம்மேளனம் ஒன்றை உருவாக்குவதற்கான முதற்கட்ட கலந்துரையாடல், நேற்று (06) இடம்பெற்றது.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமையகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில்,

தொடர்ச்சி P12

# ‘வீடு செல்வோரை வழிமறித்து கைது செய்வது ஆபத்தானது’



பா.நிரோஸ்

போராட்டங்களில் கலந்துகொண்டுவிட்டு, வீடுகளுக்குத் திரும்புவோரை, இடையிலேயே சிவில் உடையிலிருக்கும் பொலிஸார் கைது செய்வது ஆபத்தானது எனத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, “இவ்வாறு செல்வோரை பாதாளக் குழுவை சேர்ந்தோர் தூக்கிச் செல்ல முயற்சித்தால் என்ன செய்வது?” எனவும் வினவினார்.

தொடர்ச்சி P12

# கடவுச்சீட்டு விநியோகம் இடைநிறுத்தம்




நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று தற்போது தீவிரமாக பரவி வருவதால், சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டு விநியோகிக்கும் பணிகளை இடைநிறுத்துவதற்கு

தொடர்ச்சி P12




எதிரியை மன்னித்தாலும்

# ‘துரோகியை மன்னிக்கோம்’

## புத்தகத்துக்காகப் பெற்ற விவரங்களை விற்றுவிட்டனர்

வா.கிருஸ்ணா


எலும்புத்துண்டுகளுக்கு ஆசைப்படும் சிலர் தங்களை வைத்து பணம் சம்பாதிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதாக குற்றஞ்சாட்டியுள்ள வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம், அச்செயற்பாட்டுகளுக்காக தமது கவலையையும் தெரிவித்துள்ளது. கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஊடக சந்திப்பு, மட்டக்களப்பில் உள்ள மட்டு.

தொடர்ச்சி P12

# தகனசாலைகள் 24 மணிநேரம் உஷார்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மரணிப்போரின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளமையால், வைத்தியசாலையின் சவச்சாலையில், சடலங்களை வைத்திருப்பதற்கு ஏற்பட்டிருக்கும் சிக்கல்களை கவனத்தில் கொண்டு, தகனசாலைகளை 24 மணிநேரமும் திறந்து வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P12



# சந்நிதியானுக்கு அன்னதான சீல்



எம்.றொசாந்த்

அதிக எண்ணிக்கையிலான பக்தர்களை அழைத்து அன்னதானம் வழங்கியதால், சந்நிதியான் ஆச்சிரமம், தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ், நேற்று (06) பிற்பகல் மூடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில், அப்பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகரால் மேற்படி அறிவித்தல் ஒட்டப்பட்டு, ஆச்சிரமம் மூடப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவில் வருடாந்த பெருந்திருவிழா,

தொடர்ச்சி P12

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘நாட்டை முடக்க மாட்டேன்’

“கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. எனினும், நாட்டை மூடிவதற்கான இயலுமை இல்லை” என்றார்.

ஏற்பட்டிருக்கும் நிலைமை தொடர்பில் ஆகக் கூடுதலான அவதானத்தை செலுத்தி, தேவையான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் சுகாதாரப் பிரிவினருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

“இந்நிலையில், கடந்த ஒரு மாதத்துக்குள் 120 எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஒவ்வொரு ஆர்ப்பாட்டங்களிலும் 1,500 பேர் பங்கேற்றிருந்துள்ளனர் என புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன என ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீளவும் திருத்தம்

நாட்டின் தற்போதைய நிலைமையில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுளை முன்னெடுக்கவேண்டும் என குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, தளர்த்தப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை இறுக்குவது தொடர்பில் கலந்தாலோசித்துத் தீர்மானிக்குமாறும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதனடிப்படையில், 500 அல்லது அதற்கும் அதிகமானோர் அமரும் வகையிலான திருமண மண்டபமொன்றில் 150 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். 500க்கும் குறைவானோர் அமரும் வகையிலான திருமண மண்டபத்தில், 100 பேர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர். அவ்வாறான மண்டபங்களில் முன்னெடுக்கப்படும் ஏனைய வைபவங்களுக்கும் இதே நடைமுறைதான் பின்பற்றப்படும்.

இதேவேளை, இறுதிச் சடங்குகளில் பங்கேற்பதற்கு இதுவரையிலும் வழங்கப்பட்டிருந்த எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இறுதிச் சடங்கில் 25 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

அரச ஊழியர்கள் அனைவரும், செப்டெம்பர் 2ஆம் திகதியில் இருந்து கடமைக்கு அழைக்கப்பட்டனர். அவ்வாறு அழைக்கப்பட்ட சுற்றறிக்கையை மாற்றியமைத்து, கடமைக்கு அழைக்கவேண்டிய நபர்கள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கான அதிகாரம் நிறுவனங்களின் பிரதானிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருந்த அரச வைபவங்கள் யாவும் செப்டம்பர் 1 வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

# எசல பெரஹரா நாளை ஆரம்பம்

சமய சம்பிரதாயங்களுக்கு முதலிடம் கொடுத்து, மட்டுப்படுத்தப்பட்ட பங்குபற்றுநர்களுடன் நடைபெறவுள்ளது.

கண்டி தலதா மாளிகை, விஷ்ணு, நாத்த, பத்தினி, கதிரேசன் தேவாலயங்களின் பங்குபற்றுதலுடன் பெரஹரா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 12ஆம் திகதி வரையான 5 நாள்களுக்கு உள் வீதி வலத்துடன் பெரஹரா நிகழ்வுகள் இடம்பெறும். 13ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை பெரஹரா வெளிவீதி வலம் வரும்.

18ஆம் திகதி விசேட ரந்தோலி பெரஹராவும் 23ஆம் திகதியன்று பெரஹரா மற்றும் தீர்தோற்சவம் (நீர்வெட்டு) என்பவற்றுடன் பெரஹரா முற்றுப்பெறும் என தலதா மாளிகை நிர்வாகம் அறிவித்துள்ளது.

# வங்கிக்கு சென்ற பெண் உரப்பைக்குள் சடலமாக மீட்பு

அல்லாப் பிச்சை வீதியைச் சேர்ந்த 60 வயதுடைய முஹம்மத் ஹனீபா சித்தி லைலா என்பவர் ஆவார். இவர், நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் வங்கிக்குச் சென்றுள்ளார்.

வீடு திரும்பாத இவரைக் குடும்பத்தினர் தேடுதலில் ஈடுபட்டிருந்த நிலையில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அப்பெண்ணை, அவரது குடும்ப உறுப்பினர் ஒருவர் ஓட்டாவில் ஏற்றிச் சென்றார். அவரே பெண்ணை கொலை செய்தும் இருக்கலாம் என அப்பெண்ணின் கணவர், பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

**“ வாழைச்சேனையிலுள்ள கடை உரிமையாளரிடம் பேக் ஒன்றை கொண்டு வந்த சந்தேகநபர், அதனை தனது கடையில் வைத்து விட்டு, சிறிது நேரத்தின் பின் எடுத்துச் செல்வதாக கூறி, பேக்கை வைத்துச் சென்றுள்ளதாக கடை உரிமையாளர் தெரிவித்துள்ளார்**

பெண், மாவடிச்சேனை எம்.பி.சீ.எஸ்.வீதிலுள்ள வளர்ப்பு மீன் விற்கும் கடையில் வைத்து கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். அதன்பின்னர் உரப்பையில் போட்டு, ஓட்டோவில் ஏற்றிச் சென்று, வாழைச்சேனையிலுள்ள கடையொன்றுக்கு முன்பாக, சடலத்தை வைத்துச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வாழைச்சேனையிலுள்ள கடை உரிமையாளரிடம் பேக் ஒன்றை கொண்டு வந்த சந்தேகநபர், அதனை தனது கடையில் வைத்து விட்டு, சிறிது நேரத்தின் பின் எடுத்துச் செல்வதாக கூறி, பேக்கை வைத்துச் சென்றுள்ளதாக கடை உரிமையாளர், பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

குடும்பத்துக்குள் ஏற்பட்ட கொடுக்கல், வாங்கல் முரண்பாடே இக்கொலைக்கு காரணம் என்று மரணமடைந்த பெண்ணின் உறவினர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக, அப்பெண்ணை ஓட்டோவில் ஏற்றிச்சென்ற நபரையும், பெண்ணின் சடலம் வைக்கப்பட்ட கடை உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், சம்பவம் இடங்களில் மட்டக்களப்பு தடவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# டெல்டா தொற்று 117ஆக உயர்ந்தது

நாடு முழுவதும் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் இரத்த மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்திய போதே, டெல்டா தொற்றார்கள் இனங்காணப்பட்டனர் என்றும் அப்பிரிவு அறிவித்துள்ளது.

ஜூலை முதல் வாரத்தில் கொழும்பில் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களில் 75 சதவீதத்துக்கும் அதிகமானோரின் மாதிரிகளில் அல்பா திரிபு கண்டறியப்பட்டிருந்ததுடன், 19.3 சதவீதமானோரிடையே டெல்டா திரிபு கண்டறியப்பட்டது.

எனினும், ஜூலை 31ஆம் திகதிய நிலைமையின்படி, கொழும்பில் கொரோனா தொற்று உறுதியான 90 சதவீதத்துக்கு அதிகமானோரின் மாதிரிகளில் டெல்டா திரிபு கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான புள்ளிவிவரத்தைக் காட்டும் வரைபை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைகழகத்தின் மூலக்கூறு மற்றும் மரபணு ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் கலாநிதி சந்திம ஜீவந்தர, தனது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார். கொழும்பு நகரத்தினுள் டெல்டா திரிபு அதிர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் பரவிவருவதாகவும் அவர் அப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ‘மரணிப்போர் மரணிக்கட்டும் எனும் நிலையில் இருக்கிறது அரசாங்கம்’

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், ஜனாதிபதி, பிரதமர் செலுத்திக்கொண்டுள்ள தடுப்பூசி எந்த நாட்டைச் சேர்ந்தது என்பதை அவர்கள் நாட்டுக்கு அறிவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

தாம் அப்போதே கூறியதுபோல விமான நிலையத்தை மூடி வைத்திருந்தால், நாட்டில் கொரோனா வைரஸ் பரவியிருக்காது எனவும், விமான நிலையங்களைத் திறந்ததாலேயே நாடு ஆபத்தான நிலைக்கு வந்துள்ளது என்றார்.

“தற்போதைய அரசாங்கம், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் கொள்கையான, மரணிப்போர் மரணிக்கட்டும் நாங்கள் நாட்டைக் கொண்டு செல்கிறோம் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கிறது” என்றார்.

# எம்.பிக்கள் மூவருக்கு கொரோனா...

அத்துடன், மாத்தளை மாவட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரான ரோஹண திஸாநாயக்கவுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# ‘வீடு செல்வோரை வழிமறித்து...

பாராளுமன்றத்தின் நேற்றைய (06) அமர்வில் கலந்துகொண்டு விசேட கூற்று ஒன்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்து உரையாற்றிய அவர், சம்பள முரண்பாட்டை தீர்க்கக்கோரி போராட்டங்களில் ஈடுபடும் ஆசிரியர்கள், போராட்டங்களை நிறைவு செய்துவிட்டு, வீடுகளுக்குச் செல்லும்போது பொலிஸாரால் கைது செய்யப்படுகிறார்கள். இது ஆபத்தானது என்றார்..

கைது செய்யப்படுவோர், பொலிஸ் நிலையங்களில் தானே தடுத்து வைக்கப்பட வேண்டும் அவர்களை ஏன் துறைமுகத்துக்குள் அழைத்து வருகிறீர்கள்? என்றும் வினவினார்.

# தொழிற்சங்க சம்மேளனம்...

4 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எட்டுப் பேர் கலந்துகொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீன் பெர்ணான்டோ, வடிவேல் சுரேஷ், திகாம்பரம், ராதாகிருஷ்ணன், வேலு குமார், உதயகுமார், மனோ கணேசன், சுஜித் பெரேரா ஆகிய உறுப்பினர்களுடன் இணைந்து வரலாறு காணாத சரித்திரப் பயணமாக ,இந்தத் தொழிற்சங்க சம்மேளனம் அமையவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘துரோகியை மன்னிக்கோம்’

ஊடக அமையத்தில், நேற்று (06) நடைபெற்றது.

இந்த ஊடக சந்திப்பில் வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் அம்பாறை மாவட்ட தலைவி தம்பிராசா செல்வராணி, திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் செபஸ்தியான் தேவி, மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் வேலுப்பிள்ளை பொன்மணி ஆகியோர் கலந்துகொண்டு, கருத்துகளை முன்வைத்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது, “வடக்கு, கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் உள்ள வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளிடம் சில நிறுவனங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பதிவுகளை புத்தகம் வெளியிடப்போகின்றோம் என்று கூறிப் பெற்றுச் சென்றனர். இதில் பணம் சம்பாதிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

**“ தாய்மார் வழங்கிய விவரங்களை அவர்கள் மாற்றியமைத்து, அவர்கள் அதனை அரசாங்கத்துக்கு விற்பனை செய்துள்ளார்கள்**

“வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டங்களை கொச்சைப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளையும் இவர்கள் இன்று முன்னெடுத்து வருகின்றனர்.

“காணாமல் ஆக்க ப்பட்டவர்களின் விவரங்களை வழங்கியது புத்தகத்தை அச்சடிக்கப்படுவதற்காகும். ஆனால், தாய்மார் வழங்கிய விவரங்களை அவர்கள் மாற்றியமைத்து, அவர்கள் அதனை அரசாங்கத்துக்கு விற்பனை செய்துள்ளார்கள். அவர்களை நாங்கள் கண்டிக்கின்றோம். அவர்கள் எலும்புத்துண்டுக்கு சோரம்போனவர்கள். எதிரியை மன்னித்தாலும் துரோகியை நாங்கள் மன்னிக்கமாட்டோம்” என்றனர்.

# சந்நிதியானுக்கு அன்னதான சீல்

நாளை (08) ஆரம்பமாகிறது. சுகாதாரக் கட்டுப்பாடுகளின் கீழ், மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் திருவிழாக்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று (06) நண்பகலுக்குப் பின் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

அதன்போது, கட்டுப்பாடுகளை மீறி அதிகளவானோரை ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு அழைத்து அன்னதானம் வழங்கியதால், பொதுச் சுகாதார பரிசோதகரால் ஆச்சிரமம் மூடப்பட்டது.

இதேவேளை, கோவில் சூழலில் அமைந்துள்ள கடைகளில் உள்ளோர், பி.சி.ஆர் பரிசோதனை எடுக்கும் வரை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் அறிவுறுத்தப்பட்டது.

# கடவுச்சீட்டு விநியோகம்...

இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

பத்தரமுல்லவில் அமைந்துள்ள திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் அதிகாரிகள் பலருக்பு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, அவசரத் தேவையின் நிமித்தம் பெற்றுக்கொள்ளும் நபர்களுக்கு மாத்திரம் கடவுச்சீட்டு, ஒரு நாள் சேவையின் கீழ் வழங்கப்படும் என மேற்படி திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்காக சுகாதார வழிமுறைகளை பின்பற்றி, மட்டுப்படுத்தப்பட்ட அளவானோருக்கு மாத்திரம் கடவுச்சீட்டை விநியோகிக்க, குறைந்தளவு ஊழியர்கள் சேவைகளில் அமர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தகனசாலைகள் 24 மணிநேரம் உஷார்

களுத்துறை மாவட்டத்தில் உள்ள சகல தகனசாலைகளையும் இவ்வாறு 24 மணிநேரமும் திறந்து வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என களுத்துறை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் உதய ரத்னாயக்க தெரிவித்தார்.

இந்தத் தீர்மானம் தொடர்பில் உள்ளூராட்சிமன்ற ஆணையாளருக்கும் எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது எனப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இளம் குடும்பத்தின் தற்காலிக வீடு தீயில் எரிந்து நாசம்









சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட கைவேலிப்பகுதியில் நேற்று (06) ஏற்பட்ட தீவிபத்தின் போது இளம் குடும்பத்தின் தற்காலிக வீடு முற்று முழுதாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

குறித்த தற்காலிக வீட்டில் கடந்த 2018 ஆண்டு தொடக்கம் இந்த குடும்பம் வசித்து வருகின்றது. கைக்குழந்தையுடன் வாழ்ந்து வந்த நிலையில் அந்த தற்காலிக வீடும் எரிந்து சாம்பாராகியுள்ளது.

நாளாந்தம் கூலி வேலை செய்யும் இளம் குடும்பத்துக்கு, அரசாங்கத்தின் எந்த உதவியும் கிடைக்காத நிலையில் வாழ்ந்து வந்துள்ளார்கள். இந்தத் தீவிபத்து தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

வீட்டில் இருந்த உணவு பொருட்கள், புடவைகள், பணம், நகை உள்ளிட்ட ஏனைய பொருள்கள் அனைத்தும் தீயில் எரிந்துள்ளன என தெரிவித்துள்ளனர்.



# நாளை ஆடிஅமாவாசை



வி.ரி.சகாதேவராஜா
vtsaha123@gmail.com



இந்துக்களுக்கு மிக முக்கியமான நாளாக ஆடி அமாவாசை வருகின்றது. இந்த மாதத்தில் வருகிற ஞாயிறன்று (08) ஆடி அமாவாசை வருகின்றது.

அன்றைய தினம்தான், நம்முடைய முன்னோர் பித்ருலோகத்தில் இருந்து நம்மை காண்பதற்காக புறப்படுகின்றனர்.

நம்முடைய குடும்பம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்க, எதிர்காலம் சிறப்பாக இருக்க நம்முடைய சந்ததிகள் மகிழ்ச்சியாகவும் சிறப்பான வாழ்வு வாழ, நம்முடைய முன்னோர்களின் அருளும் ஆசியும் அவசியம். இன்று நாம் சந்திக்கும் கடன் பிரச்சினை தொடங்கி, மனதில் அமைதியின்மை வரை பல்வேறு பிரச்சினைகளுக்கு காரணம், நாம் நம்முடைய முன்னோரை வணங்க மறந்ததுதான் என்கிறது நம்முடைய சாஸ்திரங்கள்.

### ஆடி அமாவாசை எப்போது?

2021 ஆம் ஆண்டு இவ்வருடம் ஆடி அமாவாசை 23 ஆம் திகதி (ஒகஸ்ட் 8) ஞாயிற்றுக் கிழமையில் வருகிறது.

இன்று ஒகஸ்ட் 7ஆம் திகதி சனிக்கிழமை, இரவு 7.38 மணிக்கு அமாவாசை தொடங்கி ஒகஸ்ட் 8 ஆம் திகதி இரவு 7.56 மணி வரை நீடிக்கிறது.

அதனால் ஒகஸ்ட் 8 அன்று சூரிய உதயத்துக்குப் பின்னர் எப்போது வேண்டுமென்றாலும் அமாவாசை தர்ப்பணம் கொடுக்கலாம்.

அமாவாசை அன்று முன்னோர்களுக்குத் தர்ப்பணம் கொடுத்து வழிபடுவது வழக்கம். அதிலும் தட்சிணாயன துவக்க காலத்தில் வரும் ஆடி அமாவாசை அன்று முன்னோர்கள் வழிபாடு மிகவும் சிறப்பானதாகும்.

ஆடி அமாவாசை அன்று முன்னோர் வழிபாடு காலையிலேயே ஆரம்பித்து விட வேண்டும். அன்றைய தினம் ஏதேனும் ஒரு தீர்த்தக்கரையில் முன்னோர்களுக்கான அமாவாசை தர்ப்பணம் செய்து வர வேண்டும்.

### தர்ப்பணம் எதற்காகச் செய்யவேண்டும்?

அமாவாசை முதலான நாளில் முன்னோர்களுக்கு எள்ளும் தண்ணீரும் கொண்டு தர்ப்பணம் செய்யும் போது, அது நம் முன்னோர்களைப் போய்ச் சேரும். அதனால், அவர்கள் செய்த பாவங்களின் கெடுபலன்கள் குறையும். புண்ணியங்கள் பெருகும். நாமும் முன்னோரை வணங்கிய பலனைப் பெறலாம். முன்னோருக்குப் புண்ணியம் சேர்த்த, பாவங்களைக் குறைத்த புண்ணியத்தைப் பெறலாம் என்கிறார்கள் அறிஞர்கள்.

### சரி... யாரெல்லாம் தர்ப்பணம் செய்யவேண்டும், செய்யக்கூடாது?

தாயும் தந்தையும் இல்லை என்றிருப்பவர்கள், அவசியம் தர்ப்பணம் செய்யவேண்டும். நம், தாய் தந்தையரைத் தவிர, முந்தைய முன்னோர்களை நமக்குத் தெரிந்திருக்கலாம்; தெரியாமல் இருக்கலாம். ஆனால், அவர்களை மனதால் நினைத்து அவர்களுக்கு நன்றி சொல்லும் நன்னாள்தான் அமாவாசைத் தினங்கள். முக்கியமாக... ஆடி அமாவாசையில் வணங்கவேண்டும்.

### ஆடி அமாவாசை விரதம்:

அமாவாசை தினத்தில் ஆண்கள் விரதமிருந்து தர்ப்பணம் கொடுக்க வேண்டும். அதேசமயம், பெண்கள் கண்டிப்பாக அமாவாசை விரதம் இருக்கக்கூடாது. பெண்கள் அமாவாசை விரதம் இருப்பதில் சில விதி முறைகள் நிறைந்திருக்கிறது.

முன்னோர்களுக்கு பிடித்த உணவுகளை மதிய உணவுக்கு சமைத்து, அதை மறைந்த முன்னோர்களின் புகைப்படங்களுக்குப் பொட்டு வைத்து, பூ வைத்து சமைத்த உணவுகளை அவர்கள் முன் ஓர் இலையில் படைக்க வேண்டும்.

பின்னர் படங்களுக்கு தீபாராதனை செய்த பின்னர், அவசியம் காகத்துக்கு உணவு வைக்க வேண்டும்.

அதன் பின்னர் இலையில் முன்னோர்களுக்காகப் படைத்த உணவை வீட்டில் உள்ள மூத்தவர் சாப்பிட வேண்டும். அதன் பின்னர் மற்றவர்களும் சாப்பிடலாம். இதனால் நம் முன்னோர்கள் மகிழ்ந்து அவர்களின் ஆசி நமக்குப் பரிபூரணமாகக் கிடைக்கும் என்பது ஐதிகம்.

'பித்ருக்களை நினைத்து நாம் வழங்கும் தர்ப்பண பூஜைகள் நமக்கு செல்வத்தையும் ஆரோக்கியத்தையும் ஆயுளையும் அனைத்துக்கும் மேலாக சொர்க்க பேறு என எல்லா விதமான பலன்களையும் அளிக்கும்' என்று மகாபாரதம் சொல்கிறது.

மறைந்த நம் முன்னோர் பித்ருலோகத்தில் வாழ்கிறார்கள். அவர்கள் தங்கள் சந்ததியினரைக் காண ஒவ்வோர் ஆண்டும் ஆடி அமாவாசை அன்று பித்ருலோகத்தில் இருந்து புறப்படுகின்றனர். அவர்களுக்கு எள் தண்ணீர் வைத்து தர்ப்பணம் செய்து வழிபடுவது மகிழ்ச்சியாக அவர்கள் பயணம் தொடங்க துணையாக இருக்கும்.

ஆடி அமாவாசை அன்று புறப்பட்ட அவர்கள், புரட்டாசி மாதம் வரும் மஹாலய அமாவாசை நாளில் பூமிக்கு வந்து சேருவார்கள். அன்றைக்கு நாம் அளிக்கும் தர்ப்பணம் அவர்களுக்கு சென்று சேர்ந்து அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.


கடைசியாக தை மாதம் வரும் அமாவாசை அன்று அவர்கள் நம் வீட்டுக்கு வந்து ஆசி வழங்குவார்கள். அன்று நாம் அளிக்கும் தர்ப்பணத்தைப் பெற்றுக்கொண்டு அன்றைய தினம் அவர்கள் மீண்டும் பித்ருலோகத்துக்கு புறப்படுவார்கள். அவர்களை மகிழ்ச்சியாக வழியனுப்புவதன் மூலம் அவர்களின் ஆசியை பெறலாம் என்கின்றது நம்முடைய வேதம்.

நம் முன்னோர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் வரும் சிராத்த திதி நாள் அன்று அவர்களுக்கு வழிபாடு செய்து எள்ளும் நீரும் விட்டுப் படைக்க வேண்டும். தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு அவர்கள் திதி நாள் தெரிந்தும் அன்று எள்ளும் தண்ணீரும் வழங்காமல் தானம் கொடுக்காமல் காகத்துக்கு உணவிடாமல் அலட்சியமாக இருந்தால், பித்ரு தோஷம் பற்றிக்கொள்ளும் என்கின்றது வேதம்.

நமக்கு உடலையும் உயிரையும் கொடுத்தவர்கள் நம் முன்னோர்கள். அவர்கள் விஷயத்தில் அலட்சியமாக இருத்தல் கூடாது. அனைத்து வளங்களையும் பெற்றுச் சிறப்பான வாழ்வு வாழ பித்ருக்களுக்கு உரிய நாளில் அவர்களுக்கு உரியதை வழங்கி அவர்களைத் திருப்தியாக வைத்திருப்பது கட்டாயம்.

வாயைக்கட்டி, வயிற்றைக் கட்டி, சம்பாதிப்பதால்

# கொஞ்சம் திருப்பி பாருங்கள்



## குள்ளநரிகளின் தந்திரத்துக்குள் சிக்கிக்கொள்ளாதீர்கள்



ப.பிறின்சியா டிக்சி
p.p.dixci@gmail.com

நாலு காசு சம்பாதிச்சு, நாள் பிழைப்பை பார்ப்பதென்பதே பெரும்பாடாய் இருப்பதாக இன்று பலர் புலம்புவதைக் கேட்டிருப்போம். ஏன், நாமே அவ்வாறு புலம்பிக்கொண்டிருக்கக் கூடும்.

அடுத்தநாள் உலை வைப்பதற்கு எங்கு கடன் வாங்குவது, எந்த அடகுக்கடைக்குச் செல்வது எனச் சிந்தித்தே பலரது காலம் கழிகிறது. அந்தளவுக்குப் பலரின் பொருளாதார நிலைமை மந்தமாகியுள்ளது.

ஒரு நாளுக்கான அத்தியாவசியத் தேவைகளைக் கொள்வனவு செய்வதற்கான செலவுகள் வருமானத்தையும் மீறி, ஜெட் வேகத்தில் செல்கின்றன. எனினும், வருமானமோ, அடுப்பங்கரை பூனையாட்டம் அங்கேயே படுத்துக் கிடக்கின்றது.

இவ்வார ஆரம்பத்தில் தமிழ்மிரரின் பிராந்திய நிருபர் வி.ரி. சகாதேவராஜா மின்னஞ்சலில் அனுப்பியிருந்த படங்களே, இந்தக் கட்டுரையை எழுத வேண்டுமென என்னைத் தூண்டின. உண்மையில் ஓர் ஊடகவியலாளர் பக்கச்சார்பற்றவராக இருக்க வேண்டும்.

எனினும், சமூக நலனில் பொறுப்புவாய்ந்த தாக்கத்தை ஏற்படுத்தும் ஊடகவியலாளர்கள் சார்பாக, நுகர்வோராக உள்ள பொதுமக்களுக்கு ஒருசில விடயங்களை எடுத்துரைப்பதில் தவறில்லை.

சரி! உலகளாவிய ரீதியில் கொரோனா பரவல் ஏற்படுத்திய தாக்கங்களால், தற்காலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அதிலும் நாம் அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருள்களின் விலை நாளுக்குநாள், 10 அல்லது 20 ரூபாய்களால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக, சோப் ஒன்றை இரு தடவைகள் வாங்கிப் பாவித்துவிட்டு, மூன்றாவது தடவையாக அதையே மீண்டும் வாங்கும் போது, அதன் விலை இரு மடங்காக மாறியிருக்கின்றது. எனினும், அதே சோப் என்பதைப் பார்த்து வாங்கும் நுகர்வோர், விலையை வீட்டுக்கு வந்தே கவனிக்கின்றனர்.

அதேபோன்று, சிறார்களுக்கான பால்மாவை ஆரம்பத்தில் 630 ரூபாய்க்கு வாங்கினால், அது முடிந்த பின் மீண்டும் சென்று வாங்கும் போது அது 650 ரூபாயாக இருக்கும். மூன்றாவது முறை வாங்கும் சந்தர்ப்பத்தில் அதுவே 680 ரூபாயாக மாறியிருக்கும். இவ்வாறு, நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல்வேறு பொருள்கள் நாளுக்கு நாள் கிடுகிடுவென விலை ஏறி, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாறிக்கொண்டே போகின்றது.

இப்பொருள்களின் விலைகளை, வர்த்தகர்கள் அதிகரிப்பதை விடவும் அந்தந்த தயாரிப்பு நிறுவனங்களே, எவ்விதமான கட்டுப்பாடுகளும் இன்றி, விலைகளைத் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன.

ஒரு பொருளின் விலை ஓரிரு மாதங்களுக்குள் இரண்டு அல்லது மூன்று தடவைகள் அல்லது அதற்கு மேல், இவ்விரண்டு மடங்குகளால் அதிகரிக்கப்பட்டுள்ளன. 2021ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையானது, தற்போது பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி, கடந்த 6 மாத காலப் பகுதிக்குள் இரண்டு மற்றும் மூன்று தடவைகள் விலையேற்றம் கண்டுள்ளன.

உணவுப் பொருள்கள், பெண்களுக்கான பொருள்கள், மருத்துவப் பொருள்கள் உட்பட அத்தியாவசியத் தேவைகளுக்கு அப்பால் மக்கள் அன்றாடம் பயன்படுத்தப்படும் பல பொருள்களுக்கான விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன. குறிப்பாக, பால்மா, பால் சாரந்த உற்பத்திகள், சோப், பிஸ்கெட்டுகள், அழகுசாதனப் பொருள்கள் எனப் பலவற்றை இங்கு சுட்டிக்காட்டலாம்.

இதில் துரதிர்ஷ்டம் என்றவென்றால், இதைப் பல நுகர்வோர் கவனித்தும் தம் மீது வலிந்து சுமத்தப்படும் இப்பொருளாதார சுமையை உணராமல் இருப்பதுதான். ஏற்கெனவே, கொரோனா தொற்றுக்குள் அல்லல்படும் மக்களை இந்த விலையேற்றங்களும் பாரிய நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளன.

இது குறித்து எந்தவோர் அரசியல்வாதியும் வாய்திறப்பார்கள் என நுகர்வோர் எதிர்பார்க்கக் கூடாது. ஏனெனில், நாட்டிலுள்ள பல அரசியல்வாதிகள் ஒருசில தயாரிப்பு நிறுவனங்களின் தலைவர்களாகவும் உள்ளனர். அவர்களே வியாபாரிகளாக இருக்கும் சந்தர்ப்பத்தில், அவர்கள் எவ்வாறு நுகர்வோரின் அல்லல்கள் குறித்து அலட்டிக்கொள்வார்கள்?

எப்பொழுதுமே தயாரிப்பு நிறுவனங்கள், அவர்களின் தயாரிப்புகளை விற்றுத் தீர்த்திட பல தந்திரோபாயங்களைப் பயன்படுத்துவர். கொரோனா இடர் காலத்திலும் இது விதிவிலக்கல்ல. இக்காலத்திலும் அவர்களின் வியாபார தந்திரோபாயங்களின் வடிவங்கள் சில மாறியிருக்கலாமே தவிர, தயாரிப்புகளை விற்றுத் தீர்த்திடல் எனும் இலக்கு ஒருபோதும் மாறியிராது.

உதாரணமாக, முகக்கவசங்கள் மற்றும் கைகழுவும் திரவங்கள் சுமார் இரு வருடங்களுக்கு முன்னர் வைத்தியசாலை சார்ந்தோரே அதிகளவில் பயன்படுத்தினர். எனினும், இன்று அவை அனைவருக்கும் கட்டாயமாகியுள்ளன. இதனால் இவற்றை மையப்படுத்தியே புதிய புதிய தயாரிப்புகள் அன்றாடம் அறிமுகமாகிக் கொண்டேதான் இருக்கின்றன. பல கார் இறக்குமதி நிறுவனங்கள் கூட தற்போது இதில்தான் களமிறங்கியுள்ளன.

இவ்வாறு புதிய தயாரிப்புகளின் விளம்பரங்களில் மயங்கும் நுகர்வோரும் அதை வாங்கிச் செல்கின்றனர். உடனே தயாரிப்பு நிறுவனங்களும் அப்பாடா, பொருள்கள் விற்றுத் தீர்ந்துவிட்டன என, இரு தவணையிலேயே அவற்றின் விலையை இரட்டிப்பாக்கி ஏற்றிவிடுகின்றனர்.

இது போதாதென சில நிறுவனங்கள், உற்பத்திகளின் பெட்டிகளின் அளவில் மாற்றத்தை ஏற்படுத்தாது, பெட்டிகளினுள் உள்ள பொருள்களின் நிறையைக் குறைத்துவிடுகின்றனர். பெட்டிகளில் நிறையின் புதிய அளவையும் குறிப்பிட்டிருப்பர். எனினும், பெட்டிகளின் அளவில் மாற்றம் இல்லை; ஆகையால், நுகர்வோரும் அதைக் கவனியாது பழைய விலைக்கே, நிறை குறைக்கப்பட்ட தயாரிப்புகளையும் வாங்கிச் செல்கின்றனர்.

உளுந்து ஒரு கிலோ கிராம் தற்போது 2,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது. இந்நிலையில், இட்லி மா என விற்கப்படும் சில பக்கெட்டுகளில் உளுந்தின் அளவைக் குறைத்திருப்பது பயன்படுத்தும் நுகர்வோருக்குப் புரியாமல் இல்லை.

தயாரிப்பு நிறுவனங்கள் போன்றே சுப்பர் மார்கெட்டுகள் கையாளும் தந்திரோபாயங்களும் நுகர்வேர் மீது மேலும் சுமையை ஏற்றிவிடுகின்றது. 'வேலைக்காரன்' எனும் தென்னிந்தியத் திரைப்படத்தில் ஹீரோ சிவகார்த்திகேயனுக்கு, அத்திரைப்படத்தில் வில்லன் கதாபாத்திரத்தில் நடித்திருந்த நடிகர் ஃபகத் பாசில், சுப்பர் மார்கெட்டுகளின் சில தந்திரோபாயங்களை விளக்கியிருப்பார். அதாவது, *'Supermarket in Super Marketing'* என்பது.

ஏழைகள் எப்பொழுதும் ஏழைகளாகவே இருக்கின்றனர். அவர்கள் தமது தகுதிக்கேற்ப ஆசைப்படுகின்றனர். செல்வந்தர்கள் இருக்கும் பணத்தில் நிறைவாக வாழ்கின்றனர். ஆனால், இங்கு நடுத்தர வர்க்கத்தினரின் நிலையோ வேறு. இரு தோணியில் கால் வைத்தவர்களாகத் தான் அவர்கள் உள்ளனர். சுப்பர் மார்கெட்டுகளின் தந்திரங்களில் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தினரே சிக்குகின்றனர்.

வெளிநாடுகளில் நுகர்வோர் எப்பொழுதும் காலாவதித் திகதியைப் பார்த்துத்தான் பொருள்கள் வாங்குவார்களாம். லண்டனில் தேய்காய்க்குக் கூட காலாவதித் திகதி இட்டிருப்பர். ஆனால், இங்கு நிலைமை அவ்வாறா இருக்கின்றது?

இந்தியாவில் ஒரு கிலோ கிராம் அரிசி 20 ரூபாய்க்குக் கூட வாங்க முடியும். அப்படியெனில், இலங்கையில் ஒரு கிலோ கிராம் அரிசி 54 ரூபாய்க்கா வாங்குகின்றோம்? உதாரணமாக கீரி சம்பா ஒரு கிலோ கிராமின் தற்போதைய விலை சுமார் 170 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை சென்றுள்ளது.

இவற்றுக்கிடையில் பொருள்களுக்கான தட்டுப்பாடுகளும் மக்களை மென்மேலும் சுமைக்குள் தள்ளிவிட்டுள்ளன. பால்மா தட்டுப்பாடு, எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு எனப் பட்டியல் நீண்டுகொண்டுதான் போகிறது.

பால்மா விநியோகிக்கும் கம்பனிகள் பால்மா வரவில்லை எனத் தெரிவித்து, பால்மா விநியோகத்தை நிறுத்தியுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில், ஒரு சில வர்த்தக நிலையங்களில், பால்மா தயாரிப்பு நிறுவனங்களின் பிற தயாரிப்புகளான யோகட் மற்றும் தேயிலை வாங்கினால் அந்த நிறுவனங்களின் பால்மாக்களை வாங்கக் கூடியதாக உள்ளது என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் பால்மாவை வாங்கவே கையிலிருக்கும் பணத்தை திரும்ப திரும்ப சரிபார்க்கும் பொதுமக்களால், பால்மாவுடன் சேர்த்து வாங்க நிர்ப்பந்திக்கப்படும் பிற பொருள்களையும் எப்படி வாங்க முடியும்? இந்நிலை எங்கு சென்று முடியும் எனக் கூறுவதற்கு இல்லை.

எனவே, நுகர்வோரே! இந்தக் கட்டுரையையும் படித்தும் படிக்காதது போல் இல்லாமல், சற்று சிந்தியுங்கள். தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் சுப்பர் மார்கெட்டுகள் எனும் குள்ளநரிகளின் தந்திரத்துக்குள் சிக்கிக்கொள்ளாதீர்கள்.

நீங்கள் உங்கள் வியர்வையைச் சிந்தி, வாயைக்கட்டி, வயிற்றைக் கட்டி சம்பாதித்த பணத்தில் வாங்கும் ஒவ்வொரு பொருள்களுக்கான காலாவதித் திகதி, அதன் நிறை, தரம், விலை என்பவற்றை நன்றாகப் பார்த்தே வாங்குங்கள். அதில் எந்தத் தவறும் இல்லை.




(படங்கள்: வி.ரி. சகாதேவராஜா)



ஓ! மானே மானே மானே உன்னைத்தானே..

# எதிர்காலம்?

எப். முபாரக்

இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் உள்ள பிரசித்தி பெற்ற இடங்களை வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பிரயாணிகள் பார்வையிடுவர். இதன்மூலம் பெருமளவான அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தரக்கூடிய ஒரு துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது. கடந்த வருடத்திலிருந்து, கொடிய நோயான கொவிட்-19 பெருந்தொற்று நோயின் தாக்கம் காரணமாக, நாட்டின் சுற்றுலாத்துறை முடங்கியதோடு, தற்போது கொஞ்சம் கொஞ்சமாகச் செழித்து வருகின்றது.

இலங்கையின் எந்த மாகாணத்திலும் இல்லாத அழகும் பிரமிப்புத் தோற்றமும் கவர்ச்சியும் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை நகரில் மட்டுமே உள்ளது.

கிழக்கு மாகாணத்துக்குச் சுற்றுலாச் செல்லும் வெளிநாட்டவர்களில், திருகோணமலைக்குச் சென்று மான்களுடன் படம் எடுத்துச் செல்லாதவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள்.

திருகோணமலை மாவட்டம், மான்களுக்குப் பிரசித்திபெற்ற இடமாக விளங்குகின்றது. அதிலும், வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் மாத்திரமின்றி உள்ளூர் சுற்றுலா செல்லுவோரும் மான்களை தொட்டு, வருடி, புகைப்படம் எடுத்துக்கொள்வதும் அவர்களுக்கு ஓர் அலாதியே!

இவ்வாறு இருக்கையில், திருகோணமலை நகர சபைக்கு உட்பட்ட பகுதியில், மான் கூட்டங்கள் உணவுக்காகப் பிரதான வீதிகளில் அலைந்து திரிகின்றன.

இம்மாவட்டத்தின், கோணேஸ்வரா கோவிலை அண்டிய பகுதியில், நீண்ட காலமாக வாழ்ந்து வரும் மான் கூட்டங்களுக்கு, தங்குமிட வசதிகள், உணவுகள் இன்றி, வீதியோரங்களிலும் பொது இடங்களிலும் படுத்துறங்கி வருகின்றன.

அத்தோடு, பராமரிப்பின்றி இருப்பதால், பொது இடங்களான பஸ் நிலையங்கள் மைதானம், வீதிகளில் குட்டி போடுகின்ற அவல நிலைமையையும் காணக்கூடியதாக உள்ளது.

அதேபோன்று, உணவுக்காக நகரத்தை அண்டிய பகுதிகளில் காணப்படும் மான் கூட்டங்கள், பொலித்தீன் உறைகள், கழிவுகளை உண்டு வருகின்றன.

திருகோணமலை நகர சபைக்கு உட்பட்ட பகுதியிலே அதிகளவான மான்கள் காணப்படுகின்றன. மான்களுக்கான சிறந்த பராமரிப்புகள், உணவுகள் இன்மையால் வீதியைக் கடக்க முற்படுகின்ற போதும், அதேபோன்று பொலித்தீன் பைகளை உண்ணுகின்ற மான்களும் வருடத்துக்குப் பத்துக்கும் மேற்பட்ட மான்கள் இறந்து வருவதாகவும் சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை நகர சபையால், மான்களுக்கு உணவு, கவனிப்பதற்கான கூடார வசதிகள் கடந்த காலங்களில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள போதும் சரியான முறையில்







பராமரிக்கப்படுவதில்லை எனவும் சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பராமரிப்பு இடம், தற்போது பற்றைக் காடுகளாகக் காணப்படுகின்றது. இதனை விசாலமாக்கி மான்களுக்கான உணவு நிலையமாகவும் பராமரிப்பு செயற்பாடுகளுக்கும் பாதுகாப்பதன் மூலம் மான்களின் இறப்பைக் குறைப்பதோடு வளர்ச்சியை விசாலமாக்கலாம்.

மான்களின் பாதுகாப்பு விடயத்தில், அப்பகுதி இளைஞர்கள், சமூக நலன்புரி ஒன்றியங்கள் இணைந்து, மான்களை பாதுகாப்பது தொடர்பான வேலைத்திட்டத்தை, கைங்கரித்தை மேற்கொள்ள முடியும். மான்கள், சும்மா வீதிகளில் மாண்டு மடிவதை விட, உயிர்வாழ்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

அதேபோன்று, கடந்த காலங்களில் தனி நபர்களும் மாதக்கணக்கில் தினமும் மான்களுக்கு உணவு வழங்கி வந்த நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன. இருந்த போதிலும் சரியான பராமரிப்பின்றி வீதிகளிலே மான்களைக் காணக்கூடியதாக உள்ளது.

கொவிட் -19 பெருந்தொற்றுக் காரணமாக, திருகோணமலை மாவட்டம் முழுதும் பயணத்தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் திருகோணமலை நகரில் அமைந்துள்ள மத்திய வீதி, என் சி வீதிகளில் மான் கூட்டங்கள் உணவுக்காக அலைந்து திரிந்தன. திருகோணமலை நகரை அண்டிய பகுதிகளில், மூன்றாகவோ நான்காவோ இரண்டாகவோ தனியாகவோ வீதிகளில் நடந்து திரிந்தன. மாலை வேளைகளில் இம்மான்கள், திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வர இந்துக் கல்லூரி மைதானத்தில் படுத்துறங்கும் காட்சி, அவ்வீதியால் செல்வோரை மகிழ்விக்கின்றது.

அத்தோடு, வீதிகளில் சனநடமாட்டம் இல்லாத நிலையில், வீதிகளிலும் முச்சந்திகளிலும் அழகான மான் கூட்டங்கள் நடமாடித் திரிகின்றன.

திருகோணமலை நகர சபையால் மான்களுக்கு உணவு வழங்குவதற்கு ஏதாவது ஒரு வகையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருகோணமலை ரொட்டறி கழகம், மாதக்கணக்கில் உணவை வழங்கியிருந்தது. இச்செயற்பாட்டுக்கு நாலா பக்கத்திலிருந்தும் பாராட்டுகள் கிடைத்தன. வாயில்லா ஜீவன்களுக்கு உணவு வழங்குவதையிட்டு வரவேற்பை பெற்றிருந்தது. மான்களின் பாதுகாப்பு விடயத்தில், வனஜீவராசி திணைக்களத்திடமோ நகர சபையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமோ ஒப்படைப்பதற்கோ, ஏன் காடுகளில் விடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியாது எனவும் சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மான்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறி ஆக்காமல், திகோணமலை நகர சபையால் மான்களைப் பராமரிப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கண்விழித்தால் விவசாயிகள் எழுவர்

# பலமிழந்த 'பலவான்'



விவசாயிகளை அவலத்தில் அமிழ்த்தும் போக்கு மாறவேண்டும்.



சுப்பிரமணியம் பாஸ்கரன்

தனது உழைப்பு சுரண்டப்படுவது தெரிந்தும் வாழ்நாள் முழுவதும் உழைத்துக்கொண்டிருக்கும் இரு ஜீவன்களில் ஒன்று தேனீ; மற்றையது, விவசாயி. இவ்வாறு தனது உழைப்பு சுரண்டப்படுவது தெரிந்தும், இவை இரண்டும் தம் உழைப்பை ஒருபோதும் நிறுத்திக்கொள்வதில்லை.

விவசாயி, தான் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கோ, ஏனைய விவசாய விளைபொருட்களுக்கோ உரிய சந்தை வாய்ப்புகள் இன்றி, வருடாந்தம் பெரும் கஸ்டங்களையும் நட்டங்களையும் எதிர்நோக்கி வருவதுடன், தொடர்ந்தும் கடன் சுமைகளைச் சுமக்கின்ற ஒரு நிலைமை காணப்படுகின்றது.

விவசாயிகள் பலர் ஏழைகளாகவே இருக்கின்றார்கள். மழை பெய்யுமானால் தன் குடிசை ஒழுகும் எனத்தெரிந்தும், 'இறைவா இன்று ஒரு நாளாவது மழை பெய்யாதா' என்று வேண்டிக்கொள்பவனும் விவசாயியாகத்தான் இருக்கிறான்.

இப்படிப்பட்ட விவசாயி, தான் உற்பத்தி செய்கின்ற நெல்லை, அறுவடை செய்து அதை உரிய விலைக்கு விற்க முடியாமல், நட்டத்தை எதிர்கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது. இதற்குப் பல்வேறுபட்ட காரணங்கள் காணப்படுகின்றன.



தற்போது சிறுபோக அறுவடை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அறுவடை செய்கின்ற நெல்லை உரிய விலைகளில் சந்தைப்படுத்க்கூடிய விலைவாசியில்லை. விவசாயிகளிடமிருந்து அறுவடை செய்கின்ற நெல்லுக்கான உத்தரவாத விலையை நிர்ணயித்து, நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு இதுவரை எந்த முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை.

குறிப்பாக, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நெல் சந்தைப்படுத்தும் சபை என்பன விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதன்மூலம், விவசாயிகளிடமிருந்து தனியார் கொள்ளை இலாபத்தில் நெல்லைக் கொள்வனவு செய்வதைக் கட்டுப்படுத்த முடியும்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. இந்தநிலையில், இன்று நெல்லுக்கான விலை என்பது மிகச் சரிவு நிலையில் காணப்படுகின்றது.

இம்முறை, சிறு போகச் செய்கையின் போது, விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய மானிய உரத்தை உரிய காலத்தில் கமநல சேவை நிலையங்கள் வழங்கவில்லை. உரத்துக்கான தட்டுப்பாடு, களைநாசினிகள், கிருமிநாசினிகள் என்பவற்றைச் செயற்கையாக தனியார் உற்பத்தி செய்து, அதிகூடிய விலைகளில் விற்பனை செய்துள்ள நிலையில், விவசாயிகளுக்கான உற்பத்திச் செலவு என்பது, கடந்த போகங்களை விட இப்போகத்தில் அதிகமாகும்,

அதேநேரம், ஒரு மூடை நெல்லுக்கான எடை அளவு 69 கிலோ கிராமாக இருக்கவேணடிய நிலையில், உலர்ந்த நெல் மூடை ஒன்றுக்கு 72 கிலோ கிராமாகவும் உலராத நெல் மூடையொன்றுக்கு 75 கிலோ கிராம் முதல் 76 கிலோ கிராம் வரை என்ற அடிப்படையில் கொள்வனவு செய்யப்படுகின்றது. ஆனால், இந்த விடயம் தொடர்பில் எதுவித நடவடிக்கைகளும் இல்லை.

தற்போது விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களோ அல்லது நெல் சந்தைப்படுத்தும் சபையோ இதுவரை எந்தவிதமான முயற்சிகளையும் எடுக்கவில்லை.

விவசாயிகள் அறுவடை செய்கின்ற நெல்லை, உடனடியாக விற்பனை செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. காரணம், ஒவ்வொரு



விவசாயியும் சொந்த முதலீடுகளை வைத்து விவசாயம் செய்வதில்லை. அதாவது, நிலத்தைப் பண்படுத்துவதில் இருந்து, விதைநெல் வாங்குதல், அறுவடை வரைக்கும் தேவையான பணத்தைக் கடனாகவே பெற்றுச் செய்கின்றனர்.

அனைத்துக்குமான கடன்களைச் செலுத்தவேண்டிய காலமும் விவசாயியினது சொந்தத் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய காலமும் இந்த அறுவடைக் காலமாகத்தான் இருக்கும். உடனடித்தேவைக்கு அறுவடைசெய்த நெல்லை விற்பனை செய்யவேண்டியதாக இருக்கும். இதுவே கூடுதலான விவசாயிகளின் நிலைப்பாடாகக் காணப்படுகின்றது.

மாவட்டத்தில் அறுவடை செய்யப்படுகின்ற நெல்லின் குறிப்பிட்ட அளவை, மேற்படி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், நெல் சந்தைப்படுத்தல் சபை என்பன உரிய காலத்தில் கொள்வனவு செய்யுமாக இருந்தால், விவசாயிகள் ஓரளவு பாதிப்புகளிலிருந்து விடுபடமுடியும்.

கூட்டுறவுத்துறை என்பது, உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல், மக்களுக்கான சேவைகளை வழங்குதல் எனப் பல்வேறு பக்கங்கள் காணப்படுகின்றன. முன்னர் உள்ளூர் உற்பத்திகளை கொள்வனவு செய்தல், அரிசி ஆலைகளை வைத்திருந்து அதன் மூலம், அரிசியை உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்தல், கைத்தொழில் நிலையங்களை நிர்வகித்தல், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்தல் எனப்பல்வேறு பரிமாணங்களில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கின. ஆனால், இன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பலம் இழந்த சங்கங்களாகக் காணப்படுகின்றன.

மீள்குடியமர்வுக்குப் பின்னர், பொதுவாக வடமாகாணத்தில் யுத்தத்தால் சேதமடைந்து செயலிழந்து போன பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை வலுவாக்கும் நோக்கில், தொழிற்சாலைகளை அமைத்துக்கொடுத்தல், நவீன முறையிலான அரிசியாலைகளை அமைத்துக்கொடுத்தல்போன்ற உதவிகளை செய்திருந்தன.

ஆனாலும், இவற்றை வைத்து முன்னேற்றம் காணமுடியாது, அவற்றை கைவிட்ட நிலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று காணப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பலம் பெற்று உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லை விவசாயிகளிடமிருந்து பத்து சதவீதமேனும் கொள்வனவு செய்யுமாக இருந்தால், விவசாயிகள் நன்மையடைவர்,

அதேபோல, நெல் சந்தைப்படுத்தும் சபையும் உடனடியாக நெல்லைக் கொள்வனவு செய்யுமாக இருந்தால், இந்த நிலமை இருக்காது.

கிளிநொச்சி மாவட்டத்தில், தற்போதுள்ள மொத்தச் சனத்தொகைக்கு ஏற்ப, சுமார் 22 ஆயிரத்து 310 மெற்றிக்தொன் நெல் வருடம் ஒன்றில் உணவுக்காகத் தேவைப்படுகின்றது. இதில் குறிப்பிட்ட தொகையை கூட களஞ்சியப்படுத்தக்கூடிய வகையில், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்டத்தில இல்லை. இதனால், இங்கே அறுவடை செய்து, இப்போது குறைந்த விலைகளில் தனியாருக்கு விற்பனை செய்யப்படுகின்ற நெல், இன்னும் இரண்டு, மூன்று மாதங்களுக்குப் பின்னர் அரிசியாகவே இங்கு கொண்டு வரவேண்டிய தேவை ஏற்படும்.

இவ்வாறு நாள் முழுவதும் உழைத்துக்கொண்டிருக்கும் விவசாயிகளின் உழைப்பு, பலவழிகளில் சுரண்டப்படுவதை யாரும் கண்டு கொள்வதும் இல்லை. அவனது குடும்பமும் ஏழ்மையில் இருக்கின்றது. இந்த நிலை மாறுவதற்கு உள்ளூர் உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கும் விவசாயிக்கு நல்லவருமானத்தை பெற்றுக்கொடுப்பதற்கும் அது சார்ந்தவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே இன்றைய தேவையாகும்.



## என்றுமே குறைவில்லாத

# துவம்சம்


வ.சக்தி
shagthivel@gmail.com

"இரவிலும் வருகின்றன; பகலிலும் வருகின்றன. நாம் கஸ்டப்பட்டு மிகவும் சிரத்தையுடன் மேற்கொள்ளும் வேளாண்மையை, கண்ணை இமை காப்பதுபோல், அல்லும் பகலும் விடிய விடிய விழித்திருந்து காட்டு யானைகளிடமிருந்து பாதுகாக்க வேண்டியுள்ளது.

எமது குடியிருப்புக்கு அருகிலுள்ள தளவாய் காட்டுக்குள்தான் சுமார் 20 இற்கு மேற்பட்ட காட்டு யானைகள் பகலில் தங்கி நிற்கின்றன. மாலை 5 மணியானதும் அவை கிராமங்களுக்குள் நுழைந்து வீடுகளையும் பயன்தரும் தென்னை, வாழை மரங்களையும், ஏனைய பயிர்களையும் அழித்தொழிக்கின்றன.

யானைகளை துரத்துவதற்குச் சென்றால், அதன் பலத்தை எம்மிடம் காட்டுவதற்கு எதிர்கொண்டு வருகின்றன. எம்மால் யானையின் பலத்தை எதிர்கொள்ள முடியுமா? இவ்வாறு எமது வாழ்வு நகர்ந்தால் எமது நிலைமை என்னாவது" எனப் படுவாங்கரைப் பகுதி மக்கள் புலம்புகின்றனர்.

வயலும் வயல் சார்ந்த சூழலுமான மருதநிலமும் காடும் காடு சார்ந்த சூழலுமான முல்லை நிலமும், மலையும் மலைசார்ந்த சூழலுமான குறிஞ்சிநிலமும் என மூவகை நிலங்களும் ஒருங்கே அமையப்பெற்ற பிரதேசம் மட்டக்களப்பின் மேற்குப் பக்கமாக அமைந்துள்ள படுவான்கரைப் பிரதேசமாகும்.

கனியவளங்கள் இனிமையுடன் இயற்கையாகவே அமையப் பெற்ற ஓர் இயற்கைச்சாரல் மிக்க வனப்பு மிகு பிரதேசமே, மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேசமாகும்.

வளங்கள் ஜொலிக்கும் படுவாங்கரைப் பிரதேசமக்கள் ஏனையவர்களைப் போல் சொகுசு வாழ்க்கை வாழவில்லை. தாமும் தமது குடும்பமும் என உடனுக்கு உடன் உழைத்தே வாழ்நாளைக் கழித்து வருகின்றனர்.

வேளாண்மைச் செய்கைக்கு மாத்திரமின்றி நிலக்கடலை. உழுந்து, சோளன், பயறு, மரவள்ளி, குரக்கன், கௌப்பி எனப் பல மேட்டுநிலப் பயிர் செய்கைகளுக்கும் பெயர்போன இந்தப்பிரதேசம், வரலாறு காணாத பேரழிவுகளையும் கடந்த காலங்களில் சந்தித்திருந்தது.

இவற்றை எல்லாம் கடந்து தற்போதைய சுமூகமான சூழ்நிலையில் அப்பிரதேச மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்நிலையில், காட்டு யானைகளின் அட்டகாசங்களும் அவற்றால் ஏற்படும் அழிவுகளும் அம்மக்களை விட்டபாடில்லை. எனவே அம்மக்கள் மத்தியில் தொடரும் காட்டு யானைகளின் இன்னல்கள் குறித்து, அந்தப் பிரதேசவாசிகளின் மிகுந்த வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

படுவான்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள போரதீவுப்பற்று, மண்முனை தென்மேற்கு, மண்முனை மேற்கு, ஏறாவூர் பற்று, வாகரை, கிரான் போன்ற பல பிரிவுகளில் மக்கள் செறிந்து வாழ்கின்றனர். விவசாயத்தையும் கால்நடை வளப்பையும், பிரதான தொழிலாகக் கொண்டுள்ள மக்கள் வீட்டுத்தோட்டம், கைத்தொழில், கோழிவளப்பு, செங்கல் வெட்டுதல், கூலிவேலை செய்தல் போன்ற இதரதொழில்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.







வருடாந்தம் ஐப்பசி தொடக்கம் மாசி மாதம் வரையான காலப்பகுதிகளில் பெரும்போக வேளாண்மைச் செய்கைகளையும் தோட்டங்களையும் பரந்த அளவிலும், சித்திரை தொடக்கம் அடி மாதம் காலப்பகுதிகளில் சிறுபோக வேளாண்மைச் செய்கையையும் குறைந்த அளவிலான காலபோக வேளாண்மைச் செய்கையையும் அந்தப்பகுதி மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு மேற்கொள்ளும் தமது ஜீவனோபாயத்துக்கு மிகநீண்டகாலமாக, காட்டு யானைகளின் அட்டகாசங்கள் அதிகரித்தே வருகின்றன. என அந்தப்பிரதேச மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

"நாங்கள், எமது கிராமத்திலிருந்து சுமார் 10 தடவைகளுக்கு மேல் இடம்பெயர்ந்து பற்பல இடங்களில் வாழ்ந்து வந்தோம். இறுதியாக கடந்த 2007ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்துள்ளோம். கடந்த யுத்தத்தால் எமது மக்கள் சகல உடைமைகளையும் இழந்துள்ளார்கள். தற்போது காட்டு யானைகள் எம் உறவுகளின் வீடுகளை இரவும் பகலுமாக மாறிமாறி உடைத்து வருகின்றன" என்கின்றனர்.

"இதுவரை எமது பகுதியில் 5 பேருக்கு மேல் காட்டு யானைகள் அடித்துக் கொன்று இருக்கின்றன. சுமார் 100 இற்கு மேற்பட்ட வீடுகள், யானைகளால் முற்றாகத் துவம்சம் செய்யப்பட்டுள்ளன. யுத்தத்தால் துன்பப்பட்ட நாங்கள், தற்போது காட்டு யானைகளால் அல்லல் பட்டுக்கொண்டே இருக்கின்றோம்.

யானைகள் கிராமத்திற்குள் உட்புகும் மையப் பகுதிகளைச் சுற்றி மின்வேலிகள் அமைத்துத் தரவேண்டும் என்பதுவே எமது கோரிக்கை ஆகும். ஆனால், எமக்கு நான்கு, ஐந்து யானை வெடிகள் மாத்திரம் தரப்படுகின்றன. யானைகள் வரும் போது, அதனை நாங்கள் வெடிக்கவைத்தால் அந்த வெடிகளை யானைகள் ஏனோ, தானோ என்று விட்டுப்போகின்றன.

அந்த வெடிகளுக்கு இங்குள்ள யானைகள் பழக்கப்பட்டு விட்டன. நாம் எத்தனை தடவைகள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மின்வேலி அமைக்க வேண்டும் என்று கூறியும் இதுவரை அது எமக்குக் கைகூடவில்லை" எனக் கூறினார். பிரதேசவாசியாகிய த.ஜீவானந்தன்.

இது இவ்வாறிருக்க, இப்பிரதேசம் வேளாண்மைச் செய்கைக்குப் பெயர்போனது. இங்குள்ளவர்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். இந்த விவசாயிகளின் கத்தரி, வெண்டி, மரவள்ளி, தென்னை, வாழைத் தோட்டங்கள் என்பவற்றை யானைகள் அழித்து வருவதோடு, வேளாண்மை வயல்களையும் அழித்து நெல் மூட்டைகளையும் உண்டும் சேதப்படுத்தியும் வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

"நாங்க மாலை ஆறு மணியானால் நித்திரை கொள்வதில்லை. விடிய, விடிய கண் விழித்துக் கொண்டுதான் இருப்போம். இவ்வாறுதான், ஒருநாள் நள்ளிரவு மணியளவில் உறக்கதிலிருக்கும் போது, எமது குடிசை வீட்டின் பின் சுவரை இடித்துக் கொண்டு யானையின் தும்பிக்கை எங்கட விட்டினுள் இருப்பதைக் கண்டோம். பின்னர் அரோகரா என்று கத்தினோம். கிராமத்திலுள்ள பலரும் ஓடிவந்து சத்தமிட, யானை ஒருவாறு சற்று நகர்ந்து விட்டது" என்கிறார் இன்னொரு பிரதேசவாசி.

காட்டுயானைகளின் தக்குதலுக்கும் அட்டகாசங்களுக்குள்ளும் தள்ளப்பட்டுள்ள படுவான்கரைப் பிரதேச மக்கள், 1957 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய வெள்ளம், 1978 ஆண்டு வந்த சூறாவளி, பின் தொடர்ச்சியாகப் பீடித்த கோரயுத்தம், பின்னர் தொடர்ந்த வரட்சி, வெள்ள அனர்த்தம், போன்ற இவைகளனைத்திற்கும் முகம்கொடுத்து, தற்போது மெல்லமெல்ல மீண்டெழுந்து வந்து கொண்டிருக்கும் நிலையில் 'மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பதுபோல' தற்போது காட்டு யானைகள் கூட்டமாகவும் தனியாகவும் கிராமங்களுக்குள்ளும் மக்களின் பயிர் பச்சைகளுக்குள்ளும், புகுந்து அப்பாவி மக்களின் உயிர்களையும் உடமைகளையும் குடியிருக்கும் வீடுகளையும் அழித்து வருவது மட்டுமல்லாமல், அவர்களது வாழ்வாதாரத்துக்குத் துணை நிற்கின்ற தொழில்களையும் அழித்து வருவது என்பது மிகவும் வேதனையான விடயமே!





# புறப்படாத 'கோச்சி'


சதுராஞ்சலி ஹரிஹரன்

தென்னிந்தியாவில் சாதிக் கொடுமையாலும் பட்டினியாலும் மக்கள் திண்டாடுவதை, சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அம்மக்களை கூலித் தொழிலாளிகளாக ஆங்கிலேயர்கள் என்று அழைத்து வந்தார்களோ, அன்று தொடங்கியது மலையக மக்களின் வரலாறு. மலைப்பாங்கான இடங்களில் குடியமர்த்தப்பட்டதால், 'மலையகத் தமிழர்' என்றும் 'இந்திய வம்சாவளி தமிழர்' என்றும் பெயர் குறிப்பிடப்பட்டனர்.

200 வருடங்களுக்கு மேலாக பல்வேறு வளர்ச்சியைக் கண்ட தோட்டத்துறை, இன்று இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியமைக்கும் காரணியாக மாற்றம் பெற்றுவிட்டது. காலப்போக்கில் வாக்குரிமை, ஊதிய அதிகரிப்புகள் என்று சலுகைகள் இம்மக்களுக்குக் கிடைத்தாலும் என்றுமே மாற்றம் பெறாத ஒன்றுதான் லயன்கள்.



மலையகத் தொழிலாளர் குடும்பங்களுக்கு சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் வீடுகளுக்கு மேலதிகமாக தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தின்போது அறிவித்தது. இத்தேவையானது முழுமையடைய இன்னும் எத்தனை வருடங்கள் செல்லும் என்பதைக் கணிப்பிட முடியாது.

200 வருட காலத் தேவை லயன்களுக்கு பதிலாக, தனி வீட்டுத் திட்டங்கள்; அதை அவ்வளவு இலகுவாகச் செய்துவிட முடியாது என்பதும் நிதர்சனமான உண்மை. அரசாங்கத்தாலும் இந்திய நிதி உதவியாலும், கட்டம் கட்டமாக வீட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆரம்ப காலத்தில் தனித்தனி வீடுகளாக கட்டப்பட்டதுடன், அதன் பின்னர் மாடிவீட்டு திட்டங்களாக முன்னெடுக்கப்பட்டன. அதில் காணப்பட்ட சவால்களால், அத்திட்டம் தோல்வியடையவே மீண்டும் காணியுடனான வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைக்கு வரத்தொடங்கின. அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்கள், தீ விபத்துகளால் உடமைகளை இழந்தவர்கள் முன்னுரிமை அடிப்படையில் முதலில் வீடுகளை பெற்றுக்கொண்டனர். 'பெருந்தோட்ட மக்கள் அனைவருக்கும் வீடு' என்பதே இத்திட்டத்தின் தொனிப் பொருளாக அமைந்தது.

இலங்கையில் வீட்டுத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் காணியின் அளவு மற்ற சமூகங்களை காட்டிலும் மலையக மக்களுக்கு குறைவானது என்பதே உண்மை. ஆனால், காணி உரித்துடனான 7 பேர்ச் காணியில் வீடு என்பது ஒரு சிறந்த வளர்ச்சி என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இரண்டு அறைகள், ஒரு வரவேற்பறை, மலசலகூட வசதியுடன் 750 சதுர அடி நிலப்பரப்பில் இந்த வீடுகள் அமைக்கப்படுகின்றன. காணி உரித்தும் கிடைக்கப் பெறுவதால் தனி வீட்டுத்திட்டத்தின் முழுப்பயனையும் மக்கள் பெறமுடியும். மலையக மக்களின் சமூக வாழ்க்கை முறைக்கும் அவர்களின் அடையாளத்தை மாற்றியமைப்பதற்கும் லயங்களிலிருந்து தனி வீட்டுத்திட்டத்துக்கு முன்னேறிச் செல்ல வேண்டியது அவசியமானதொன்றாகும்.

வீட்டுத் திட்டத்தின் நகர்வுகள் மந்த வேகத்தில் காணப்படுகிறது என்று குறை கூறும் எதிரணியினரும் இந்தத் திட்டத்தின் பெறுமதியை உணராத சமூகத்தினரும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், இத்திட்டத்தின் நிறைகளைக் காண்பது போலவே, குறைகளையும் காண வேண்டியது கட்டாயம். ஒரு வீட்டை அமைப்பதற்காக ஒதுக்கப்படும் 10 இலட்சம் ரூபாயும் முழுமையாக இத்திட்டத்துக்காகப் பயன்படுத்தப்படுவதில்லை என்பது பலரின் கருத்து. மேலும் கையளிக்கப்பட்ட வீடுகளில் கூட, முறையான வசதிகள் பூரணப்படுத்தப்படவில்லை என்பதோடு, கட்டி முடிக்கப்படாத வீடுகள் கவனிப்பாரற்றுக் கிடப்பதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படாமலும் பாதை வசதிகளும் விளக்கு வசதிகளும் இன்றி பூரணப்படுத்தப்படாத ஒரு திட்டமாகவே இத்திட்டம் மக்களுக்கு கையளிக்கப்படுகின்றது. கட்டி முடிக்கப்படாமல் காணப்படும் சில வீடுகளின் கூரைகள் மழைக்காலங்களில் பறந்துவிடுகின்றன. சுவர்களில் வெடிப்புகளும் நிலத்தாழ்வுகளும் இந்த வீட்டுத் திட்டங்கள் தொடர்பில் விமர்சனங்களை ஏற்படுத்தி விடுகின்றன. காணி உறுதிப்பத்திரமும் முறையானதாக இல்லை என்று அண்மைக்காலங்களில் பாராளுமன்றில் கூட பேசப்பட்டது நினைவிருக்கலாம்.

கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் கையளிக்கப்படும் விதத்திலும் குறைபாடுகளும் முறைகேடுகளும் காணப்படுகின்றன. கட்சி அடிப்படையிலும் தொழிற்சங்கங்களின் பரிந்துரையின் அடிப்படையிலுமே பயனாளிகள் தெரிவு இடம்பெறுகின்றது என்ற பிரச்சினைக்கும் தீர்வேயில்லை. அரசியல்வாதிகளா அல்லது வீடு கட்டுவதை பொறுப்பேற்கும் ஒப்பந்தக்காரர்களா இதற்கெல்லாம் காரணமானவர்கள்?

நிதிப்பற்றாக்குறை, காலநிலைக் காரணிகள் என்பவற்றை காரணம் காட்டி வீடுகளின் தரம் தொடர்பாக உரிய பதிலை யாரும் வழங்குவதில்லை. ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட லயன்கள் 200 வருடங்களைத் தாண்டியும் எப்படி தாக்குப் பிடிக்கிறது என்று சிந்தித்துப்பாருங்கள். இன்று இவ்வளவு தொழில்நுட்பங்களுக்கு மத்தியில், எம்மால் ஏன் அதை சாத்தியப்படுத்த முடியவில்லை என்பது புரியும்.



வெறுமனே மற்றவர்களை மட்டும் குறை கூறி, பயனாளர் தரப்பை ஆராயாமல் விட்டுவிட முடியாது. லயன்களில் வாழும்போது மழைக்காலத்தில் தகரம் பறந்தாலோ சுவர்களில் வெடிப்பு ஏற்பட்டாலோ நிர்வாகத்திடம் கோரிக்கை வைத்து, அனுசரணையை எதிர்பார்த்து பழகிவிட்டார்கள். அதே மனநிலையில் தனி வீட்டுத் திட்டத்தின் வரப்பிரசாதத்தை அவர்கள் இழந்துவிடக்கூடாது. நம்முடைய வீடு என்ற எண்ணம் எப்பொழுதுமே இருக்க வேண்டும். ஆனால், தோட்டப்புறங்களில் இன்று நடப்பவை, தான் பெற்றுக்கொண்ட வீட்டைக் கைமாற்றம் செய்வதும் வாடகைக்கு விடுவதும் ஆகும். இதனால் தொடர்ந்தும் லயங்களிலேயே வசிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. புதிய வீட்டின் பராமரிப்பு செலவையும் லயன்களை விட்டு இடம் பெயருவதால் நிர்வாகத்தின் மூலம் கிடைக்கும் சலுகைகளில் குறைவு ஏற்படுவதையும் கொண்டு வீட்டுத் திட்டத்தின் முழு பலனையும் உரிமையையும் அவர்கள் அனுபவிக்க தவறிவிடுகின்றனர்.

தொழிலாளிக்கு இந்த வீட்டுத் திட்டங்கள் புதிய முகவரியை தருகின்றன என்பது மட்டுமே அவர்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய ஒன்று. ஆகவே, மக்கள் முதலில் மாற வேண்டும்; உரிமைகளை ஏற்கப் பழக வேண்டும்; சலுகைகளை மட்டுமே வேண்டிக்கிடப்பது முட்டாள்தனம்.

வீடமைப்புக்காக செலவிடப்படும் நிதி, எந்த ஒரு தனி மனிதனுடையதல்ல. அரசினதும் மற்றும் நன்கொடையாகக் கிடைக்கப்பெறும் மக்களின் வரிப்பணமுமாகும். அதை முறையாக கையாள்வது எல்லோருடைய கடப்பாடாகும். வெறுமனே ஒருவரையொருவர் குறை கூறுவதும் அரசியல் வெறுப்பைக் காட்ட ஒரு பேசுபொருளாக மாத்திரமே இப்பிரச்சினையை பார்ப்பதும் சிறந்ததல்ல.

அரசியல்வாதிகளும் நிர்வாகமும் நிர்மாணப் பணிகளை ஒழுங்கமைப்பதோடு முறையான கண்காணிப்புகளையும் மேற்கொள்ள வேண்டும். நிதி முறையாக கையாளப்படுவது முதல் தரமான வீடுகள் கையளிக்கப்படுவதுவரை, அரசாங்கமும் தனது தலையீட்டை உறுதிப்படுத்த வேண்டும். குறைந்தளவு வீடுகளானாலும் தரமான வீடுகளாகவும் சகல வசதிகளையும் கொண்ட வீடுகளாகவும் கையளிப்பதே வினைத்திறனான செயற்பாடாகும்.

வீடுகளைப் பெற்றுக்கொள்ளும் பயனாளர்களின் நடவடிக்கை குறித்து கண்காணிப்பதும் பராமரிப்பு தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதும் தோட்ட நிர்வாகத்தின் பொறுப்பாக அமையவேண்டும். 'தோட்டம்' என்ற பெயர் மாறி, 'கிராமம்' என்ற பெயர் வரவேண்டும்.

லயனும் லாம்பும் என்று வாழ்ந்தது போதும். வீடும் விளக்கும் என்று எண்ணத் தொடங்குங்கள். மாற்றங்களை நீங்கள் ஏற்காத வரை, மற்றவர்களால் எதையும் மாற்ற முடியாது. அது நல்லதாக இருந்தாலும் சரி, தீயதாக இருந்தாலும் சரி...

# ஒவ்வொரு நொடிப்பொழுதும் அதீத கவனமே அவசியம்

ஒவ்வொரு நாளும் கிடைக்கின்ற தகவல்கள் மற்றும் போகிற போக்கைப் பார்த்தால், செப்டெம்பர் மாத இறுதிக்குள் நாட்டை முழுமையாகத் திறந்துவிடமுடியாத நிலைமையொன்று ஏற்பட்டுவிடுமோ, என்றோர் அச்சம் பலரிடத்திலும் சூழ்கொண்டுவருகின்றது.

நாடு மீண்டும் முழுமையாக முடக்கப்பட்டுவிடுமோ, பயணக்கட்டுப்பாடுகள் மீளவும் அமல்படுத்தப்பட்டு விடுமோ என்ற மனப்பிராந்தியை, கடந்த இரண்டு, மூன்று தினங்களாக வெளியாகியிருந்த தகவல்கள் ஏற்படுத்தியிருந்தன. எனினும் கட்டுப்பாடுகளே கடுமையாக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலைகளில் கட்டில்கள் நிரம்பி வழிகின்றன. விடுதிகளின் தரையில், இரவோடு இரவாக நூற்றுக்கணக்கான கொரோனா தொற்றாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அவசரசிகிச்சைப் பிரிவுகளும் நிரம்பியிருக்கின்றன என்பதெல்லாம் புகைப்படங்களுடன் காண்பிக்கப்பட்டன.

கொரோனா தொற்றைத் தடுப்பதற்கான தடுப்பூசிகள் ஒருபுறம் மிகவேகமாக ஏற்றப்பட்டும், தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்பட்டும் கொண்டிருக்கின்ற நிலையில், தொற்றின் வேகம் விரைவாக அதிகரித்துச் செல்வதை ஜீரணிக்க முடியாதுள்ளது.

தொற்றாளர்களில் பலர் முதலாவது தடுப்பூசியைப் பெற்றவர்கள், அல்லது இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றவர்களாக இருக்கின்றனர். இந்த நிலைமை நீடித்துச் செல்லுமாயின், தடுப்பூசியின் மீதான நம்பிக்கையும் இல்லாமற்போய்விடும். கொரோனா தடுப்பூசி என்பது ஒரு பாதுகாப்புப் பொறியே தவிர, அதுமட்டுமே நிரந்தரத் தீர்வாக அமையாது.

ஆகையால், சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, அடிக்கடி கைகளைக் கழுவவேண்டும்; அநாவசியமாக முகக்கவசங்களைக் கழற்றாதிருத்தல், பொது இடங்களில் கட்டாயமாக சமூக விலகலைக் கடைப்பிடித்தல், கண்கள், மூக்கு, வாயை அடிக்கடி தொடாமல் இருத்தல் என்பன மிகவும் முக்கியமானவை. இவற்றுக்கப்பால் தங்களைப் பாதுகாக்க, முடிந்தவரையில் வீடுகளில் இருப்பதே உசிதமானது.

ஆக, முதலாவது அலையின் போது, எவ்வாறு மேலதிக பாதுகாப்புடன் இருந்தோமோ, அதற்குமேல் ஒருபடி செல்லவேண்டும். இல்லையேல், தொற்றாளர்களின் எண்ணிக்கை ஏறுமுகத்தில் செல்வதையே பார்க்கவேண்டிவரும்.

பல வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றமையால். மேலதிக விடுதிகள் சிலவற்றையும் கொரோனாவுக்கு சிகிச்சையளிக்கும் விடுதிகளாக, அந்தந்த நிர்வாகங்கள் மாற்றிவருகின்றன. ஆனால், முகக்கவசத்தை முறையாக அணியாதவர்களையும் சமூக இடைவெளியைப் பேணாமல் ஒட்டி உரசிக்கொண்டு பயணங்கள் செய்வதையும் பொதுவெளியில் அவதானிக்க முடிகின்றது.

வைரஸ் தொற்றுவதிலிருந்து தப்பிப்பதற்கான முதலாவது தடுப்பான முகக்கவசத்தையே முறையாக அணியாவிடின், எவ்வாறான புத்திமதிகளைக் கூறினாலும் மரமண்டைகளுக்கு ஏறாது. அருகில் யார்தான் செல்லவிரும்புவர்? இவர்கள்தான், தங்களுக்குத் தாங்களாகவே வைரஸை தொற்றிக்கொண்டு, ஏனையவர்களுக்கும் தொற்றிவிட்டு, வியாபிக்கச் செய்கின்றனர்.

நிலைமைகள் கைகளை மீறிச் சென்றுகொண்டிருக்கின்றன. ஆகையால், ஒவ்வொரு நொடிப்பொழுதும் அவதானமாக இருக்கவேண்டும். இல்லையேல், சனத்திரள்மிக்க இடங்களில், புதுப்புது வகையான பிறழ்வுகள் ஏற்படுவதையும் அவையே உயிர்களுக்கு உலையை வைத்துவிடும் என்பதையும் மறந்துவிடக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136



Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

தங்கள் வாழ்க்கை இப்படித்தான் அமைய வேண்டுமென்ற கற்பனையில் வாழ்ந்தவர்கள், காலப்போக்கில் விரக்தியுடன் வாழ்வது ஏன் எனக்கேள்வி எழுக்கின்றது.

சுமூகமான வாழ்வுக்குப் பொறுமை, சகிப்புத்தன்மை வேண்டும். மேலும், தங்களது பலவீனம், குறைபாடுகளை உணர்ந்தேயாக வேண்டும்.

'நான்தான் சரியான முறையில் இருக்கின்றேன்' எனத் தன்னைத்தான் மெச்சினால் அது உண்மையாகுமா? குறைபாடுகள் எதுவெனப் புரிந்து கொள்ளுதல் கூடச் சிரமம்தான். ஆனால், பெற்றோர், உறவினர் மூலம் சில சந்தேகங்களைக் கேட்டு அறியவேண்டும். முக்கியமாக, நல்ல நண்பர்கள் மூலமாகத் தன்னுடைய செயல்களில் தவறுகள் நடக்கின்றதா என அறிவதில் என்ன வெட்கம்?

சின்னச்சின்ன தெரியாத தவறுகள் மாபெரும் குற்றமல்ல. புத்திமதி கூறும் வேண்டப்பட்டவர்கள் மீது பாயக்கூடாது. நீர் யார் என்னைப் பற்றிக் கூறுவது எனும் ஆணவம் வேண்டாம்! திசைமாறி வாழ்ந்த பின்பு துன்பப்படுவது யார்? தவறுகளை ஒத்துக்கொள்க.

பருத்தியூர் பால வைரவநாதன்

ஆணைக்குழுக்கள் – பரிந்துரைகள்

# தீர்வுக்காக எங்கும் தமிழ் மக்கள்

**லக்ஸ்மன்**

புத்தரை இன்னமும் தங்களது வீடுகளில் வைத்திருப்பவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் ஏதோ ஒருவகையில் வயது கடந்தவர்கள். அவ்வாறு புத்தரை மதித்தவர்களுக்குப்பிறகு இப்போது புத்தரை ஓர் அவமானப் பொருளாகப்பார்க்கின்ற நிலைமையே தமிழர்களிடம் உருவாகியிருக்கிறது. அதற்குக் காரணம் சிங்களப் பெரும்பான்மையினரால் நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவந்த செயற்பாடுகளேயாகும். யுத்தம், யுத்தகாலம், யுத்த இழப்புகள், யுத்தக் கொடுமைகள், இன்னல்கள் என்ற வரிசையுடன் கடந்த 40 வருடகாலம் அதற்கு இறுக்கமான காரணமாக அமைந்தன. சுதந்திரத்துக்குப்பின்னரான மொத்த வருடத்தை இதில் கணக்கில் கொள்ளாமலிருப்போம்.

இலங்கையில் ஒவ்வொன்றுக்கும் ஆணைக்குழுவையே நியமிக்கும் வழக்கம் ஒரு வரலாறாகவே இருந்து வருகிறது. அது போன்று ஓர் அரசாங்கம் புதிதாக ஆட்சிக்கு வந்தால், ஏற்கெனவே ஆட்சியில் இருந்த அரசாங்கத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் தவறென்று கைவிட்டு புதிதாக தாம் ஒரு செயற்பாட்டைத் தொடங்குவதும் வரலாறுதான்.

அந்த ஒழுங்கில்தான் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக புதிதாக ஓர் ஆணைக்குழுவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்தார். கடந்த ஜனவரி 21, பெப்ரவரி 12 ஆம் திகதிகளில் ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியூடாக புதிய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

ஏற்கெனவே மனித உரிமை, சர்வதேச மனிதாபிமான சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் ஆணைக்குழுக்களும் ஏனைய குழுக்களும் விசாரணைகளை மேற்கொண்டு பல பரிந்துரைகளையும் அறிக்கைகளையும் சமர்ப்பித்துள்ளன. அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகள், பரிந்துரைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரை செய்யவேண்டும் என்பதே இப் புதிய ஆணைக்குழுவின் செயற்பாட்டு எல்லையாகும். உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் தலைமையில் ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ஓய்வுபெற்ற மாவட்ட செயலாளர் நிமல் அபேசிறி, யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு இக்குழு அமைக்கப்பட்டது.

இவ் ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கை ஒன்றை பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் ஜனாதிபதியிடம் கையளித்தும்விட்டது. அதில், பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு ஆணைக்குழு இணங்கவில்லை.

பயங்கரவாதத் தடைச்சட்டம் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை அவர்களுடைய விடுதலை சார்ந்த போராட்டங்களை அடக்குவதற்காக உருவாக்கப்பட்டது. பல்வேறு நிலைமைகளுக்கப்பால் அது இப்போது எல்லாவற்றுக்குமானதாக உள்ளதாக விதந்துரைக்கப்படுகிறதே தவிர வேறொன்றுமில்லை. முன்னாள் சட்டமா அதிபர் டி.ஆர். டி சில்வா தலைமையிலான நல்லிணக்க ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கை, ஓரளவுக்கேனும் சிங்களவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதாக இருந்தது. ஆனாலும் அது கூட நடைமுறைப்படுத்தப்படவில்லை.

நிலைமாறுகால நீதிச் செயற்பாட்டினை முன்னெடுக்கும் கடந்த அரசாங்கத்தின் செயற்பாட்டில் பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டாலும், காணாமல் போன அலுவலகம், இழப்பீட்டு காரியாலயம், உண்மையை கண்டறிதல் போன்ற செயற்பாடுகள் இன்னமும் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை.

நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் சரியாக நடைபெற்றிருந்தால் வருடங்கள் தாண்டியும் வடக்கில் காணாமலாக்கப்பட்டவர்களது உறவினர்களது போராட்டம் தொடர்ந்த வண்ணமிருக்காது. இலங்கையில் யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்கள், மக்களின் பிரதிநிதிகளின் இணக்கப்பாட்டுடன், அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொறிமுறைகள் உருவாக்கப்படவேண்டும். அதுவே சிறந்த தீர்வாகவும் இருக்கக்கூடும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பது குறித்த சிந்தனைகள் தோற்றம்பெற்றாலும் இன்னமும் நம்மால் எதனையும் அடைந்துவிட முடியாமைக்கு என்ன காரணம் என்றே இந்த ஆணைக்குழுக்கள் சிந்தித்திருக்க வேண்டும்.

இதுவரை அமைக்கப்பட்ட பல பொறிமுறைகள் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதாக அமையாமல் நம்பிக்கை இழப்புக்கானதாகவே அமைந்திருக்கின்றன.

யுத்தத்தின்போது மனித உரிமை சட்டம், சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்படுவது வழமையே! இருந்தாலும் அதனை ஏற்றுக் கொள்வதற்கான மனப் பக்குவம் இருக்கும்போதுதான் அங்கு நல்லிணக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பு கள் ஏற்படும். இல்லையானால் அதற்கான சுந்திரமான விசாரணை மேற்கொள்ள சுதந்திரமான பொறிமுறை ஒன்று அமைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்குள் அதன்மூலம் நம்பிக்கையை ஏற்படுத்தலாம். அதன் ஊடாக போராட்ட காலங்களிலும், போரின் போதும் மனித உரிமைகளை மீறி செயற்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் இதுவே இப் பொறிமுறையின் செயற்பாடாக இருக்க வேண்டும்.

நாட்டில் கடந்த காலங்களில் ஆட்சியிலிருந்த ஒவ்வோர் ஆட்சியாளரும் முயற்சித்த விடயமே இனப்பிரச்சினைக்கான தீர்வு. இருந்தாலும் அது கைகூடவே இல்லை. அதற்கு முக்கியமான காரணமாக தென்னிலங்கை சிங்கள மக்களது எதிர்ப்பையே சொல்லமுடியும். மஹிந்த ஆட்சியில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த அமைக்கப்பட்ட எல்.எல்.ஆர்.சி. ஆணைக்குழுவின் பல பரிந்துரைகளும் தூக்கி வீசப்பட்டு, புதிதான பரிந்துரைகளுக்கு வழி தேடப்படுகிறது. ஆனால் பெரும்பான்மை பலம்மிக்க ஆட்சியானது அதனைச் செய்துமுடிக்கக்கூடியதே. ஆனால், சர்வதேசத்திடம் இருக்கும் பிடிகொடுப்புகளை விட்டுவிட்டு தனியே நகர முனையும் போக்குதான் இன்னமும் நம்பிக்கையீனத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகிறது.

முன்னைய ஆணைக்ககுழுக்களின் தீர்மானங்களை மதிப்பீடு செய்தல் தொடர்பாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கும் உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் வியாழக்கிழமை (05.08.2021) சாட்சியமளித்த கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட பேராசிரியர் ஏ. சர்வேஸ்வரன் "இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையே இறுதித் தீர்வாக இருக்கவேண்டும். என்றாலும் இன்றைய நிலையில் தென்னிலங்கை மக்கள் அதற்கு தயாரான நிலையில் இல்லை. அதனால் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும். அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளாமலேயே இதனை மேற்கொள்ளலாம்" என்று தெரிவித்திருக்கிறார்.

அதே போன்று கடந்த 27.07.2021 அன்று இவ் ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்துள்ள தேசிய சமாதான பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா, "இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண 1956இல் இருந்து ஆட்சியில் இருந்த அரச தலைவர்கள் முயற்சித்தார்கள். என்றாலும் அந்த முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. இருப்பினும் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையை பெற்றுக்கொண்டுள்ள இந்த அரசாங்கத்தால் அதனை செய்யமுடியும். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நாடு ஒருபோதும் முன் செல்ல முடியாது" எனத் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவருடைய கருத்துகளும் இரண்டு விதமானதாக இருந்தாலும் இரண்டும் ஒன்றே. நாட்டு முன்னேற்றம், நாட்டின் அமைதியிலும் ஒருமித்த செயற்பாட்டிலுமே இருக்கிறது. வடக்கு கிழக்கு மக்களை வேறாகவும் ஏனைய பிரதேச மக்களை வேறாகவும் காணும் தன்மையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் வேண்டுகோள்.

எந்த ஓர் அரசாங்கத்திலும் இல்லாத அடக்குமுறை தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக மாவீரர் தினம், முள்ளிவாய்க்கால் நினைவு, திலீபன் நினைவு, அன்னைபூபதி நிகழ்வு, கருப்பு ஜூலை நினைவு, டெலோ அமைப்பின் வெலிக்கடைப் படுகொலை நினைவு- தேசிய வீரர்கள் தினம், புளொட் அமைப்பின் வீரமக்கள் தினம், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தியாகிகள் தினம், காணாமல்போனோர் நினைவுகள் என தடுப்புகளும், தடையுத்தரவுகளும், கைதுகளும், விசாரணைகளும் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன. பாதுகாப்புத் தரப்பினரின் அதிகார எல்லைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அமைக்கப்பட்டிருக்கும் முன்னைய ஆணைக்குழுகள், குழுக்களின் தீர்மானங்களை மதிப்பீடு செய்தல், அடுத்தகட்ட நடவடிககைகளை எடுத்தல் தொடர்பாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணை ஆணைக்குழு எதனைச் சாதிக்கும் என்பதுதான் புதிய கேள்வி.

இனப்பிரச்சினைக்கு தீர்வும் இன நல்லிணக்கமும் ஒன்றுடன் ஒன்று இணைந்ததாகவே காணப்படுகிறது. யுத்தத்தின்போதும் யுத்தத்துக்கு பின்னரும் தமிழ் மக்கள் எதிர்கொண்டுவரும் இன்னல்களுக்கு முடிவுகட்டுவதாக அதற்கான பதில் அமையுமாக இருந்தால் நல்லதே.

## கடிதங்கள்

# எப்போது தீரும் இந்த குரங்குகள் தொல்லை?

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேச செயலத்தின் கீழ் வரும் தம்பிலுவில், திருக்கோவில், விநாயகபுரம், முனையூர் ஆகிய பகுதிகளில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீடுகளில் உள்ள பொருள்களை குரங்குகள் தூக்கிச்செல்வதாகவும் பல இடங்களில் வீட்டின் ஓடுகளை உடைப்பதாகவும் சிறுவர்கள் விளையாடுவதற்கு பயப்படுவதாகவும் தாம் மிகவும் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாக மக்கள் அச்சம் தெரிவிகின்றனர்.

இதனை கருத்தில்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், குருங்குகளை காட்டுப் பகுதிகளுக்கு விரட்டுவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– நடராஜன் ஹரன்





### இயற்கைப் பசளையில் உச்ச விளைச்சல்; பாலும் அதிகரிக்கும்; முட்டைகளும் பெருகும்

# ‘அசோலா பாசி’ அசல் பசளை

செ. கீதாஞ்சன்

களை நாசினிகள், இரசாயன பசளைகளின் தாக்கம், இந்த பூமியை விட்டுவைக்கவில்லை. இரசாயனப் பசளைக்கு அடிமையான விவசாயிகளின் நிலம்தான், இன்று விவசாயிகளின் விளைநிலங்களாக காணப்படுகின்றன.

இரசாயன பசளைகளின் தாக்கம், களை நாசினிகளின் நச்சுத் தன்மையின் விளைவுகள், மனிதர்களை சும்மா விட்டுவைக்கவில்லை. குறிப்பாக, வடக்கில் அதிகரித்து வரும் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கைக்கு, என்ன காரணம் என ஆராய்ந்தால், நிலத்தின் நீர் ஓட்டத்தில் கலக்கப்படும் இரசாயனங்களே காரணம் என அறியவந்துள்ளது. இதன் தாக்கங்கள் பலஆண்டுகளுக்கு தொடரலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அடுத்துவரும் சந்ததிகளைக் காப்பாற்ற, அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை சேதனப் பசளை பாவனையாகும். இது, வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், விவசாயிகளுக்குக் கசப்பாகவே இருக்கின்றது. விவசாயிகளின் அடுத்தடுத்த தலைமுறையைப் பாதுகாக்கவும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவுமே அரசாங்கம் இந்த நடவடிக்கை எடுத்துள்ளது என உணரமுடிகின்றது. இதை, விவசாயிகளும் புரிந்துகொள்ள வேண்டும்.

முன்னைய காலத்தில், காட்டாற்று நீரைக் குடித்து வாழ்ந்த விவசாயிகள், இன்று அவர்களின் கிணற்று நீரைக் கூட குடிக்கமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

இதற்கெல்லாம் காரணம், நிலத்தடி நீரில் ஏற்பட்ட மாசுபடுதல்கள்தான். குடி தண்ணீருக்காக இன்று வன்னியில் அல்லற்படும் மக்களும் சுத்தமான குடிநீரினைப் பெற்றுக்கொள்ளமுடியாத மக்களுமாகவே தண்ணீரினை விலைக்கு வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஆயிரக்கணக்கில் குளங்கள் இருந்தும், என்ன பலன்? சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள எடுக்கும் பிரயத்தனம்தான் எத்தனை எத்தனை...

சுற்றுச் சூழலைப் பாதுகாப்பாக வைத்திருப்பதன் ஊடாக, மக்களின் ஆயுட்காலத்தையும் அதிகரித்துக்கொள்ளலாம். இன்று ஆயுட்காலம் குன்றிய நாடுகளின் வரிசையில், எங்கள் நாடும் இடம்பிடித்துள்ளது.

இவற்றை மாற்றி அமைக்கவே, சேதனப் பசளையும் இயற்கை விவசாயத்தையும் விவசாயிகள் கையில் எடுக்க வேண்டிய காலகட்டத்தை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

மண்ணின் வளம் சமநிலையில் பேணப்படும்போது, இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுகின்றன. அதற்கேற்ற வகையிலேயே இரசாயனக் கலவைகளை மண்ணில் விதைக்காமல் இயற்கையோடு ஒன்றிப் பயணிப்போம். எங்கள் நாட்டையும் நாட்டின் சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் தூண்களாக விவசாயிகளும் மாறவேண்டும் என்பதற்கு, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கோம்பாவில்லைச் சேர்ந்த அருந்தராசா என்ற விவசாயி சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கின்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு கமநலசேவை பிரிவில் மருதங்குளத்தின் கீழ், இம்முறை சிறுபோக நெற்செய்கையினை மேற்கொண்ட விவசாயிகள் அறுவடையைப் பெற்றுள்ளனர். இந்தப் பிரதேசத்தில் ஒரு விவசாயி ஏனைய விவசாயிகளுக்கு முன்னுதாராணமாக, சிக்பு நெல்லை விதைத்து, நெல்லின் விளைச்சலை அதிகரித்தும் களையையும் கட்டுப்படுத்தியுள்ளார். அருந்தராசா என்ற விவசாயி, விவசாய போதானாசிரியர்களின் ஆலோசனைக்கு அமைவாக அறுவடையில் வெற்றிகொண்டுள்ளதுடன் சிறந்த விளைச்சலினையும் எடுத்துள்ளார்.

இவர் கூறுகின்றார், “வயல் நிலங்களில் உள்ள பன்றி நெல் எனப்படும் களையினை அழிப்பதற்கு முயற்சி எடுத்தும் அது கட்டுப்படுத்த முடியவில்லை. களையினை கட்டுப்படுத்துவதற்காக சிகப்பு நெல்லினை எந்த அறிமுகமும் இல்லாமல் இரண்டு ஏக்கருக்கு விதைத்தேன். நல்ல அறுவடை கிடைத்தது. களையினையும் கூலி கொடுத்து கட்டுப்படுத்த முடிந்தது. இந்த சிகப்பு நெல்லிற்கு ஒரு மதிப்புள்ளதாக நெல்லு வியாபாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

தற்போது எனக்கு நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது. இதனால் தொடர்ந்து அடுத்த போகத்திற்கு பத்து ஏக்கருக்கு இந்த நெல்லினை விதைப்பதாக முடிவு செய்துள்ளேன்.

இந்த சிகப்பு நெல்லின் முளைதிறன் சிறப்பாக உள்ளது. வயிலில் தண்ணீருக்குள் சேத்துக்குள் தாண்டாலும், தண்ணி வத்த வத்த முளைக்கும். காற்றுக்கு நெல்லு விளாது; ஏனைய நெல்லு இனங்கள் காற்றிற்கு சாய்ந்து விழுந்துவிடும். இது அவ்வாறு இல்லை. ஏனைய களைகளைக் கட்டுப்படுத்த (கோரை, நெற்சப்பிக்கு) மருந்து அடித்துள்ளேன். இரண்டு தடவைகளே பசளையைப் போட்டுள்ளேன். அடிக்கட்டு பசளையும் ஒருபசளையும் தான் வயலுக்கு இட்டுள்ளேன்.

இந்த வயலுக்கு தண்ணீர் கட்டும்போது அசோலா பாசியினை விட்டேன். அது விளைச்சலினை கொடுத்துள்ளது. அசோலா பாசி நிலத்திற்கு நைதரசனின் செறிவினைக் கூட்டும். இதனை பாவிப்பதன் ஊடாக, ஏனைய பசளைகளின் வீதத்தினை குறைத்துக்கொள்ளலாம்.

அசோலா பாசியினை வயலுக்கு இடுவதன் ஊடாக, அது தண்ணியில் பெருகும். இதனால் விவசாய



மண்ணின் வளம் பாதுகாக்கப்படும். அசோலா பாவிப்பதால் பசளை இல்லாத காலத்திலும் அதனை எதிர்கொள்வதற்கு பசளை பாவனையினை குறைப்பதற்கும் வழிவகுக்கும். இதனால் பசளை இல்லாத காலத்திலும் வயல் நிலங்களுக்கு வெற்றியளிக்கக்கூடிய விளைச்சலை தரக்கூடிய வகையில், இலகுவாக பெற்றுக்கொள்ளும் அசோலா பாசியில் இருந்து பயன் பெறலாம்” என்றார்.

உண்மையில் வடக்கில் விவசாயிகள் தற்போது அசோலா பாசியினை பாவிப்பார்களாக இருந்தால், உரப்பாவனையினை குறைத்துக்கொள்ளமுடியும்

இன்று விவசாயிகள் செய்ய வேண்டிய முதல் வேலை, அவர்கள் விவசாயம் செய்யும் மண்ணைப் பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் விவசாய பண்ணையில் மண் பரிசோதனை செய்து கொடுக்கப்படும். அதற்கேற்ற வகையில் மண்ணின் தன்மைக்கு ஏற்றவாறு இயற்கை உரத்தினை பயன்படுத்திக் கொள்ளலாம்.

நைதரசன் செறிவு காணப்படுவதால், அசோலா பாசியினை வயலுக்கு இடுவதன் ஊடாக களைகளை கட்டுப்படுத்த முடியும். மீண்டும் வயல் நிலங்களை பண்படுத்தும் போது, அது மண்ணுக்கு பசளையாகப் பயன்படும்.

கால்நடைகளுக்கு தீவனமாகவும் அசோலா பாசி பயன்படுத்தப்படுகின்றது. தற்போது கால்நடை தீவனத்துக்கான விலை அதிகமாக உள்ளதால், கால்நடை வளர்ப்போர், இதனை வீட்டில் செய்து பயன்பெற்றால், மாட்டில் இருந்து அதிகளவான பால் உற்பத்தியும், கோழியில் இருந்து நல்ல முட்டையும் கிடைக்கும்.

இவ்வாறு இயற்கையினை கொண்டு பல்வேறு விவசாய நடவடிக்கைக்கு பயன்படுத்தக் கூடியவாறான அசோல உற்பத்தி தொடர்பில் அறிந்து கொள்ளாத விவசாயிகள், அதனை அறிந்து கொள்வதற்காக முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் விவசாய பண்ணையை நாடுகள். நாட்டிற்குள்ளும் வீட்டுக்குள்ளும் இயற்கை வளத்தைச் சேருங்கள்.







# நின்றுகொண்டு நீர் குடித்தால் குடலிறக்கம்



பைஷல் இஸ்மாயில்

குடலிறக்கம் எனப்படும் ‘ஹெர்னியா’ நோய் ஆண், பெண், குழந்தைகள், சிறுவர்கள் என வயது வேறுபாடின்றி வரக்கூடிய பொதுவான நோயாகும். குடலின் ஒரு பகுதியோ வயிற்றின் உள்ளுறுப்புகளைச் சுற்றி இருக்கும் சவ்வோ (பெரிட்டோனுயம்) வயிற்றுச் சுவரின் (பிரிமென் தகடு) இடைவெளி வழியே வெளித்தள்ளுவதால் இந்நோய் ஏற்படுகின்றது. இந்நோய் ஏற்படுவதற்கான காரணம், பாதிப்புகள், ஏற்படாமல் பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்து, மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு, சித்த ஆயுர்வேத ஆதார வைத்தியசாலையைச் சேர்ந்த ‘சர்வாங்கம்’ (பொது வைத்தியர்) வைத்தியர் எஸ். எம்.தௌஹ்த்தார் உடனான உரையாடலை கேள்வி-பதில் வடிவத்தில் தருகின்றோம்.

**கேள்வி: குடலிறக்கம் நோயின் வகைகள் எவை?**

பதில்: இது இன்குயினல் குடலிறக்கம், இன்ஸிஸனல் குடலிறக்கம், ஹயட்டஸ் குடலிறக்கம், பெமோரல் குடலிறக்கம், தொப்புள் குடலிறக்கம் என வகைப்படும்.

இன்குயினல் குடலிறக்கம் என்றால், பெரும்பாலும் ஆண்களுக்கு ஏற்படும். ஹெர்னியாவில் 70 சதவீதம் இன்குயினல் ஹெர்னியாவேதான் இருக்கும். இந்தப் பாதிப்பு ஏற்பட்டால், உடலின் பலவீனமான கவட்டு கால்வாய் பகுதிக்கு குடல் தள்ளப்பட்டு, அடி வயிற்றில் நோ காணப்படும்.

இன்ஸிஸனல் குடலிறக்கம் என்றால், வயிற்றில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட பகுதியில், தையல் அல்லது பலவீனமான இடத்தில் குடல் இறங்கிவிடும்.

ஹயட்டஸ் குடலிறக்கம் என்றால், மார்பிலிருந்து அடிவயிற்றை நோக்கிச் செல்லும் ஓர் உணவுக் குழாயின் பெயராகும். வயிற்றின் ஒரு பகுதி உணவுக் குழாயின் (ஹயட்டஸ்) வழியாக வெளியே தள்ளினால், அதை ‘ஹயட்டஸ் ஹெர்னியா’ என்பர். இது பெரும்பாலும் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படுகிறது.

பெமோரல் ஹெர்னியா என்றால், குடற் திசுக்கள் தொடைச்சிறையின் சுவற்றை நோக்கித் தள்ளப்படுவதாகும். இது எடை அதிகமான பெண்களுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்குமே அதிகமாக ஏற்படுகிறது.

தொப்புள் குடலிறக்கம் என்றால், பொதுவாக தொப்புள், அதன் அருகில் உள்ள பகுதிகள் வெளித்தள்ளித் தெரிவதைக் குறிக்கும். இவ்வகையான பாதிப்புகள் ஆண், பெண் இருபாலரையும் பாதிக்கும்.

**கேள்வி: ஹெர்னியா ஏற்படக் காரணங்கள் எவை?**

பதில்: நீர் அருந்தும் போது உட்கார்ந்து குடிக்க வேண்டும். ஏனென்றால் நின்று கொண்டு நீரை அருந்தும் போது, அந்த நீர் வயிற்றிற்குள் அதிவேகமாக நேரடியாகச் சென்று, ஹேனியா எனும் நோய் ஏற்படுகிறது. குடலுக்குள் நீர் நேராகச் செல்வதால், குடல் சுவற்றை வேகமாக தாக்குகிறது. அதனால் குடல் சுவர் மட்டுமல்ல, இரைப்பை, குடல் பாதை முழுவதும் பாதிக்கப்படுகின்றது.

இச் செயலை நீண்ட நாள்கள் நாம் செய்வோமாக இருந்தால், இரைப்பை, குடல் பாதையின் மீள்தன்மை அதிகரித்து, செரிமான பாதையில் செயல் பிறழ்ச்சி ஏற்படக்கூடும். மேலும், உடல் எடை அதிகரிப்பு, தொடர்ச்சியான மலச்சிக்கல், புகைபிடித்தல் போன்ற காரணங்களால் குடலிறக்கம் ஏற்படும் வாய்ப்பை அதிகரிக்கச் செய்கின்றது. தொடர்ச்சியான இருமல், அறுவை சிகிச்சையால் ஏற்பட்ட பாதிப்புகளால் தசைகள் பலவீனமாகுவதாலும், அதிக எடையை தூக்குவதாலும் ஏற்படுகிறது.

**கேள்வி: ஹெர்னியா ஏற்பட்டதற்கான அறிகுறிகள் என்ன?**

பதில்: குடலிறக்கம் ஏற்பட்டதற்கான முதல் அறிகுறி என்றால், பாதிக்கப்பட்ட பகுதியில் கட்டிகள் ஏற்படும். வேறு அறிகுறிகள் என்றால், பதிக்கப்பட்ட இடத்தில் வலி, அது தொடர்பான அசௌகரியங்கள், சோர்வு, அடி வயிற்றில் பலவீனமான உணர்வு போன்றவை காணப்படும்.

மேலும், மார்புப் பகுதியில் வலி, மூச்சு விடுவதில் சிரமம் போன்றவையும் குடலிறக்கத்தின் அறிகுறிகளாகக் கூட இருக்கலாம். ஹயாட்டல் ஹெர்னியாவில், மேற்புற வயிற்றில் கடுமையான வலி தோன்றும், முக்கியமாக வெறும் வயிற்றில் ஏற்படக் கூடும். சில நேரங்களில் ஹெர்னியா பிரச்சினைகள் ஏதுமற்ற நிலையிலும் இது காணப்படலாம்.

**கேள்வி: குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் ஹெர்னியா ஏற்படும் என்று குறிப்பிட்டீர்கள் அதுபற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

பதில்: குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் ஹெர்னியா ஏற்படலாம். சில சமயங்களில் குழந்தைகள் ஹெர்னியாவோடு பிறக்கும் வாய்ப்புகள் உள்ளன. சிறிய வயதில் ஏற்படும் ஹெர்னியாவுக்கு சிகிச்சை அளிக்க முடியும். ஆனால், முதலில் அதற்கான சரியான அறிகுறிகளை கண்டறிவதே மிக முக்கியமான விடயமாகும். சிறார்களுக்கும் குழந்தைகளுக்கும் இரண்டு விதமான ஹெர்னியாக்கள் ஏற்படும். ஒன்று, இங்குவினால் ஹெர்னியா; இரண்டாவது, தொப்புளில் ஏற்படும் அம்பலிக்கல் ஹெர்னியா ஆகியவவையாகும்.

குழந்தைக்கு ஏற்படும் எந்தவொரு பிரச்சினையையும் தாய் நன்கறிவார். தொப்புள் கொடியில் ஹெர்னியா இருக்கும் என்றால், தொப்புளில் அதிகமாக வீக்கம் காணப்படும். மேலும், குழந்தை மலம் கழிக்கும் போதும், சிறுநீர் கழிக்கும்போதும் தொப்புள் கொடியின் வீக்கம் பல்கிப் பெருகுவதையும் குழந்தை அழுவதையும் தாய் கண்டிப்பாக அவதானிப்பார். அதன் மூலமாக கண்டறியப்படுகிறது.

இங்குவினால் ஹெர்னியாவை பொறுத்தவரை குழந்தைகள் மலம் கழிக்கும் போதும், சிறுநீர் கழிக்கும்போதும் முக்குவார்கள். அதேநேரம் ஆண் குழந்தைகளாக இருந்தால் அவர்களின் விதைப்பை வீங்கி பெருத்துக் காணப்படும். இதன் மூலமும் கண்டறிந்து கொள்ளலாம்.

**கேள்வி: இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் என்ன?**

பதில்: சிறுநீரகப் பாதிப்பு, ஆத்திரட்டிஸ், நரம்புகள் பதைபதைப்பு, அண்ணாந்து நீர் குடிப்பதால் காது நோய் ஏற்படும்.

சிறுநீரகப் பாதிப்பு: நீரை நின்றவாறோ, நடந்தவாறோ குடித்தால், சிறுநீரகங்கள் வடிகட்டும் செயல்முறை குறைந்துவிடும். சிறுநீரகத்தின் செயல்முறை பாதிக்கப்பட்டால், சிறுநீரங்கள், சிறுநீர்ப்பை, இரத்தத்தில் நச்சுக்கள் தங்கி, அதனால் சிறுநீரகம், சிறுநீர்ப்பை தொடர்பான நோய்களின் தாக்கம் அதிகரிக்கும் வாய்ப்புகள் அதிகமுள்ளன.

உட்கார்ந்து நீரை குடிப்பதால், உடலின் அனைத்து இடங்களிலும் நீர் உள் நுழைந்து, நச்சுத் தன்மையை சிறுநீரகங்களுக்கு கொண்டு சென்று, நச்சுகளை உடலில் இருந்து முறையாக வெளியேற்றிவிடும்.

ஆத்திரட்டிஸ்: ஆத்திரட்டிஸ் ஏற்படும் வாய்ப்புகள் அதிகரிப்பதாக சில ஆய்வுகள் கூறுகின்றது. அதுவும் நீரை நின்றவாறு குடிப்பதால், உடலின் மூட்டுப் பகுதிகளில் உள்ள நீர்மங்களின் சமநிலைக்கு இடையூறை ஏற்படுத்துகிறது. இதனால் நாளடைவில் மூட்டு வலிக்கு ஆளாகி, ஆத்திரட்டிஸ் ஏற்பட வழிவகுத்துவிடும்.

நரம்புகள் பதைபதைப்பு: பொதுவாக நின்று கொண்டிருக்கும் போது சிம்பதெடிக் நரம்பு மண்டலம் செயற்பட ஆரம்பிக்கும். சிம்பதெடிக் நரம்பு மண்டலம் செயற்பட ஆரம்பித்தால், இதயத் துடிப்பு அதிகமாகும், இரத்த நாளங்கள் விரியும், நரம்புகள் அதிகமாக டென்சனாகும், கல்லீரலில் இருந்து சர்க்கரை வெளியேற்றப்பட்டு உடல் சுறுசுறுப்புடன் வேகமாக இயங்கும்.

அந்நேரம் நின்றுகொண்டு நீரைக் குடித்தால், நேரடியாக சிறுநீர்ப்பையை அடைந்து விடும். உட்கார்ந்து இருக்கும் போது பாராசிம்பதெடிக் நரம்பு மண்டலம் செயற்பட ஆரம்பித்து, உடல் ரிலாக்ஸ் ஆகி, செயற்பாடுகளின் வேகம் குறைந்து, நரம்புகள் அமைதியாகி, உண்ணும் உணவுகள், குடிக்கும் நீர் அனைத்தும் மெதுவாக செரிமான மண்டலத்தில் இருந்து வெளியேற்றப்படும்.

அண்ணாந்து நீர் குடிப்பதால் காது நோய்: அண்ணாந்து நீர் அருந்துவதால் காது நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன. ஏனென்றால், எமது உடம்பில் காது, மூக்கு, தொண்டை வழிகள் ஒரே பாதையில் அடுத்தடுத்து உள்ளன. அதனாலேயே இது ஏற்படுகிறது.

தம்ளரில் வாய்வைத்துக் நீரை அருந்தினால், காதில் ஏற்படுகின்ற நோய்கள் இல்லாது போகும்.

**கேள்வி: இதிலிருந்து விடுபட என்ன வழிமுறைகளை கையாள வேண்டும்?**

பதில்: உடலின் மெட்டபாலிசம் சீராக நடைபெற, போதியளவு நீர் தேவைப்படுகிறது. அவ்வாறு நீரை நாம் அருந்தும்போது உட்கார்ந்து அருந்த வேண்டும். குறிப்பாக கீழே குறிப்பிட்டுள்ளவாறு நீர் அருந்தி வருவோமாக இருந்தால் எமக்கு வருகின்ற பல நோய்களில் இருந்து நாம் தப்பித்துக்குக் கொள்ளலாம்.

காலையில் எழுந்தவுடன் 1-3 தம்ளர் நீரை அருந்தவும், மதிய உணவுக்கு முன் ஒரு மணி நேரத்துக்கு முன் 2-3 கப் குடிக்கவும், இரவு உணவு உண்பதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன் 2-3 கப் குடிக்கவும்; தம்ளரில் நன்றாக வாய் வைத்துக் குடிக்க வேண்டும்; அவசரமின்றி மெதுவாகக் குடிக்க வேண்டும்.

வாய் நிறைய நீரை வைத்திருந்து கொஞ்சம், கொஞ்சமாக வயிற்றுக்குள் இறக்குதல் வேண்டும். அப்போது எச்சிலுடன் குதப்பி தண்ணீரை வயிற்றில் இறக்குவதால் சாப்பிட்ட உணவு ஜீரணமாகும்.

**கேள்வி: குடல் இறக்கம் நோய்கான ஆலோசனை என்ன?**

பதில்: சிலர் குடல் இறக்கத்தின் ஆரம்பத்தில் அலட்சியமாக இருந்து விடுவார்கள். இன்னும் சிலர் அறுவை சிகிச்சைக்குப் பயந்து, குடல் இறக்கத்தைப் புறக்கணிப்பார்கள். இதனால் குடல் இறக்கத்தில் அடைப்பு ஏற்பட்டு, அதன் விளைவாக குடல் வயிற்றுக்குள் போகாமல் இரத்த ஓட்டம் தடைப்பட்டு, குடல் அழுகி மிக ஆபத்தான நிலைமைக்கு ஆளாகலாம். ஹெர்னியா என்பது குணமாக்கக் கூடிய நோயாகும். இதில் பயப்பட வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை.



வைத்தியர் எஸ்.எம். தௌஹத்தார்

குற்ற உணர்ச்சியில்

# தவிக்கும் யாஷிகா



இளங்கோ பாரதி
ilangobharathy727@gmail.com



விஜய் தொலைக்காட்சி புகழ், 'பிக்பொஸ்' நிகழ்ச்சி மூலம், இரசிகர்கள் மனதில் இடம்பிடித்து கொண்டவர் நடிகை யாஷிகா ஆனந்த்.

ஜீவா நடிப்பில் வெளியான 'கவலை வேண்டாம்' திரைப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகமான இவர், அதனைத் தொடர்ந்து 'துருவங்கள் பதினாறு', 'இருட்டு அறையில் முரட்டுக் குத்து', 'சோம்பி' உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.

எனினும், இவருக்கென அதிக இரசிகர்களைப் பெற்றுக் கொடுத்தது 'பிக்பொஸ்' நிகழ்ச்சியே. இதில் இவர், தனது ஆற்றல்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வாய்த்திருந்தது. வெற்றியாளராகும் வாய்ப்புகள் அதிகம் இருந்த சந்தர்ப்பத்தில், இவர் நிகழ்ச்சியை விட்டு வெளியேறியது இரசிகர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. எனினும், குறித்த தொலைக்காட்சியின் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றதோடு, தன்னை ஒரு நட்சத்திர அந்தஸ்துக்கு உயர்த்தியிருந்தார்.

இந்நிலையில், கடந்த ஜூலை மாதம் 24 ஆம் திகதி இரவு 11 மணியளவில், நடிகை யாஷிகாவும் அவரது சினேகிதி வள்ளிச் செட்டி பவனியும் மற்றும் இரண்டு ஆண் நண்பர்களும் பயணித்த கார், கிழக்கு மகாபலிபுரம் சாலையில் கட்டுப்பாட்டை இழந்து, சாலையின் நடுவே இருந்த தடுப்புச் சுவரில் மோதிக் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்தில், யாஷிக்காவின் சினேகிதி பவனி காரில் இருந்து தூக்கி வீசப்பட்டு, ஸ்தலத்திலேயே மரணமானார். (இவர் அமெரிக்காவில் மென்பொருள் பொறியியளாளராக பணிபுரிந்த நிலையில், விடுமுறையில் வந்திருந்தார்)

யாஷிகாவும் இடுப்பு எலும்பில் பல முறிவுகளோடு வலது காலும் முறிந்துள்ள நிலையில் பலத்த காயங்களுடன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

அறுவைச் சிகிச்சைகளின் பின்னர், சாதாரண வார்ட்டுக்கு மாற்றப்பட்டுள்ளார். கூடவே பயணித்த இரு ஆண் நண்பர்களும் காயங்களுடன் தப்பியுள்ளதோடு ஆரம்ப சிகிச்சைகளுக்குப் பின்னர் வீடு சென்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்விபத்துக் குறித்து யாஷிகா சமூக வலைத்தளங்களில் பதிவுகளை வெளியிட்டுள்ளார்.

'என் காயங்களுக்கான அறுவைச் சிகிச்சை முடிந்து நான் ஓய்வில் இருக்கிறேன். அடுத்த ஐந்து மாதங்களுக்கு என்னால் எழுந்து நிற்கவோ, நடக்கவோ முடியாது. நாளெல்லாம் படுக்கையில்தான் இருக்கிறேன். அதிலிருந்தபடியே தான் எனது இயற்கை உபாதைகளையும் கழிக்க வேண்டும். என்னால் எந்தப் பக்கமும் திரும்ப முடியவில்லை. இப்படியேதான் பல நாள்களாக விறைப்பாக இருக்கிறேன். என் பின்பகுதி முழுவதும் காயமடைந்துள்ளது. அதிர்ஷ்டவசமாக எனது முகத்தில் எதுவும் ஆகவில்லை. ஆனால், இது கண்டிப்பாக எனக்கு மறுபிறவிதான். ஆனால், இப்படி ஒரு மறுபிறவியை நான் கேட்கவில்லை. உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் நான் காயப்பட்டிருக்கிறேன். கடவுள் என்னைத் தண்டித்திருக்கிறார். நான் இழந்தவற்றை விட இந்தத் தண்டனை பெரிய விஷயமல்ல' என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்விபத்துக்கான காரணம், அதிவேகத்தில் இக் கார் பயணித்ததே எனச் சம்பவத்தை நேரில் பார்த்தோர் விவரித்துள்ளனர். எனினும், யாஷிகா தற்போது இவ்விடயத்தை மறுத்து வருகின்றார். பவனியின் இழப்பு யாஷிகாவிடம் ஒரு குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதை அவர் சமூக வளைத்தளங்களில் பதிவிட்டு இருக்கின்றார்.

'நான் உயிர் பிழைத்ததுக்குக் கடவுளுக்கு நன்றி கூறுவதா இல்லை, பவனியின் இழப்புக்காக கடவுளை கோபித்துக் கொள்வதா' என்று உணர்ச்சி ததும்பக் குறிப்பிட்டுள்ள வார்த்தைகள், உண்மையில் அவர் ஓர் இழப்புக்குக் காரணமாக இருந்த குற்ற உணர்ச்சியோடு தவிக்கிறார் என்பதை வெளிப்படுத்தியுள்ளன.

அதிக வேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல் தண்டனைக்குரிய ஒரு குற்றம். அதிலும் இதன் மூலம் மரணத்தை ஏற்படுத்துதல், தண்டனையை மேலும் இறுக்கமாக்கும். இவ்விரண்டு குற்றச் செயல்களோடு மூன்றாவதாகவும், ஒரு குற்றத்தை யாஷிக்கா இழைத்திருப்பதாகச் சம்பவத்தை நேரில் பார்த்தோர் தெரிவித்துள்ளனர். அதாவது, விபத்து நடந்த வேளை யாஷிகா குடிபோதையில் இருந்தார் என்பதே அதுவாகும்.

எனினும் யாஷிகா, தான் குடிபோதையில் வாகனம் செலுத்தவில்லை என மறுத்து வருகின்றார். விபத்துக்குள்ளாகிய கார், யாஷிகாவின் தாயாரின் பெயரில் பதிவாகியுள்ளது. சாரதி இருக்கையில் யாஷிக்காவும் பக்கத்தில் பவனியும் அமர்ந்திருந்ததாகவும், இவர்கள் இருவரும் ஷீட் பெல்ட் அணிந்திருக்கவில்லை எனவும், காரின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த ஆண் நண்பர்கள் 'ஷீட் பெல்ட் ' அணிந்திருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதிகவேகம் உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் என்பது அனைவரும் அறிந்திருக்கும் ஒரு விடயம். அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகனங்களில் சில, இக்காரணத்தாலேயே விபத்துக்குள்ளாகின்றன. எனினும், குறித்த விபத்து நடந்த இடத்தில், அதிகம் இருட்டாக இருந்தது என்று யாஷிகா வழங்கியுள்ள வாக்கு மூலத்தையும் கவனத்திற் கொள்ளவேண்டும். மேலும், குறித்த பகுதிகளில் சி.சி.டி.வி கெமராக்கள் காணப்படவில்லை. விபத்துப் பிரதேசமாகக் காணப்படும் இப்பகுதியில், சி.சி.டி.வி கெமராக்கள் ஏன் வைக்கப்படவில்லை என, சமூக ஆர்வலர்கள் பலர் கேள்வி எழுப்பி வருகின்றனர்.


இவ்விபத்து யாஷிக்காவுக்கு மாத்திரம் பாடம் புகட்டவில்லை. அதிகவேகத்தில் வாகனத்தைச் செலுத்தும்அனைவருக்குமே பாடம் புகட்டியிருக்கின்றது. சிலருக்குப் புதுமைகள் புரிவது களிப்பைத் தரும். அதுவும் தம்வயதொத்த நண்பர்களோடு இணைந்து களியாட்டங்களில் ஈடுபடும்போது அனைத்தையும் மறந்துவிடுகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நாடு முடக்கப்பட்ட நிலையில், வீடுகளுக்குள்ளே அடைபட்டிருந்த இளையோர் வெளியே செல்வதற்கான வாய்ப்புகள் கிடைத்த போது, தம் நண்பர்களோடு ஒன்று கூடலுக்குத் திட்டமிடுவது சாதாரணமாகத் தோன்றினாலும், இவ்வாறானதொரு நிகழ்வால் யாஷிகாவுக்கும் அவரது தோழிக்கும் நிகழ்ந்த இழப்புகள் மற்றவர்களால் சீர்தூக்கிப் பார்க்கப்படவேண்டும்.

ஒகஸ்ட் நான்காம் திகதி, 22 ஆவது பிறந்த நாளை அண்மித்த யாஷிக்காவின் இளமை வாழ்க்கை, இதன் பின்னர் எவ்வாறு இருக்கும் என்பது அனைவரையும் சிந்திக்கச் செய்கின்ற ஒரு விடயமாகும். உயிர் ஆபத்து நிலையிலிருந்து மீண்டாலும், நடிகையான இவர் சினிமாத் துறையில் நிலைத்து நிற்க முடியுமா? என்ற வினா எம் மனங்களில் தொக்கி நிற்கின்றது.

அவரது உடல் முழுமையாகத் தேறிய பிறகு, இவர் பொலிஸ் விசாரணைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும். ஒரு மரணத்துக்குக் காரணமாக இருந்தவர் என்ற வகையில், இவர் மீது கூறப்படும் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் தனது இளமைக்காலத்தைச் சிறையிலேயே கழிக்க நேரிடலாம்.

இளமை, அழகு, ஆற்றல் ஆகிய அனைத்தும் நிறைந்த இவரது எதிர்காலம் என்னவாகும் என்ற விடயத்தில், இவரது ரசிகர்கள் மிகுந்த கவலை கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. எது எப்படியாக இருப்பினும் இவ்விபத்து, வாகனங்கள் செலுத்தும் அனைவருக்கும் ஓர் எச்சரிக்கையை ஏற்படுத்தி இருக்கின்றது. பிறரது அனுபவங்களில் இருந்து நாம் பெற்றுக் கொள்ளும் பாடங்கள் எமது சுய தரிசனத்தைப் பூர்த்தி செய்யவேண்டும். வேகம் விவேகமா என்பதை ஆழமாகச் சிந்தித்து நிதானத்துடன் வாகனங்களைச் செலுத்த அனைவரும் முயலவேண்டும் என்பதே சமூதாயம் வேண்டும் நிற்கும் ஒரு நலனாகும்.





கசிந்துவரும் வியர்வைத் துளிகள்

# சிகரம் ஏற்றும்

## மனதில் அமைதியையும் பெருமை, பொறாமை அற்ற எண்ணங்களையும் பரதம் தரும்

செல்வி. ஜெயகோபன் தக்சாளினி
(இராமநாதன் நுண்கலை பல்கலைக்கழகம்)

பரதநாட்டியமானது, தமிழ் மக்களின் கலாசாரச் சிறப்புப் பொருந்திய கலைவடிவம் என்பதுடன், ஆணித்தரமான சாட்சிகள் நிறைந்த தெய்வீகக் கலையாகும்.

சிறு வயதில் இருந்தே, தன்னை அழகுபடுத்தி இரசிக்கும் பழக்கமும் கலாசார ஆடை, ஆபரணங்கள் மீது கொண்ட அதீத ஈடுபாடும் சிறிதளவு இறைபக்தியும், ஒருவரை பரதம் பால் ஈர்ப்படையச் செய்யவல்லன.

ஒருவருடைய வாழ்வில், பரதக் கலை மீது பற்றும் ஈடுபாடும் ஏற்படுமாயின் அவர், இறைவனுக்குத் தான் நன்றி கூற வேண்டும். ஏனெனின் அவ்வளவு சிறப்பு பொருந்தியதும் சக்தி நிறைந்ததுமான இக்கலை, மற்றையவரின் மன நிலையை மாற்றக்கூடிய வல்லமை பொருந்தியதாகும்.

பரதம் கற்கும் மாணவர்கள், பாடப்புத்தகங்களை மட்டும் கற்றுத் தேர்ச்சி பெற முடியாது; பல்வேறு இலக்கியம், இதிகாசங்கள், புராணங்கள், கல்வெட்டுகள் போன்றவற்றையும் தேடி அறிய வேண்டும். அப்போதுதான் பரதநாட்டியத்தில் முழுமையான தேர்ச்சி அடையலாம்.

இலங்கையில், பரதநாட்டியத்துறை சிறப்பாக வளர்ச்சியடைந்து வருகிறது. அதற்கு மிக முக்கிய காரணம், உலக நாடுகளில் எங்கும் இல்லாமல், இலங்கையில் மட்டும் பாடத்திட்டத்தில் பரதநாட்டியம் ஒரு பாடமாக உட்புகுத்தப்பட்டமையும், வருடங்களில் அழகியல் போட்டிகள், தமிழ் மொழி தினப் போட்டிகள் வைத்து, அதற்கு பல்கலைக்கழகம் சென்றாலும் புள்ளி வழங்கக்கூடிய சான்றிதழ் வழங்கப்படுவதும், வட இலங்கை சங்கீத சபை பரீட்சை போன்று பல பரீட்சைகள் நடத்தப்படுவதும் காரணமாகும்.

மேலும், தற்காலத்தில் ஊடகங்களிலும் பரதநாட்டிய கலைஞர்களை ஊக்கப்படுத்துவதும் மிக முக்கியமான விடயமாக அமைகின்றது. இதனால், இலைமறை காய்களாக இருக்கும் பல கலைஞர்கள் வெளி உலகில் பிரகாசிக்கின்றார்கள். உலகநாடுகளின் பல பாகங்களில் இருந்தும் அவர்களுக்குத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு, தமது திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் ஒரு தளத்தை இந்தப் பரதநாட்டியக் கலை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பது திண்ணம்.

கணிதம், விஞ்ஞானம் உட்பட ஏனைய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கற்கும் மாணவர்களுக்கும் கிடைக்காத வாய்ப்புகள், பரதநாட்டியம் பயிலும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கிடைக்கின்றன. காரணம், இலங்கை உட்பட உலக நாடுகளில் பரதநாட்டியக் கலைக்கு, பெரும் வரவேற்பும் மதிப்பும் இருப்பதாலாகும்.

பெருமளவான பெற்றோர் மத்தியில், பரதநாட்டியத்தின் சிறப்பு விளங்காமல் இருக்கிறது என்பது கசப்பான உண்மையாகும். ஏனைய பாடங்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம், பரதக் கலைக்கு கொடுக்கப்படுவதில்லை. இதற்கு, சிறிய உதாரணம், பரத நாட்டிய வகுப்பும் பிற பாட வகுப்பும் ஒரே நேரத்தில் என்றால், அதிகளவு முக்கியத்துவம் நடன வகுப்புக்குக்

> **பரதக்கலை, மனதில் குழப்பம் இல்லாமல் ஓர் அமைதியான மாற்றத்தையும் மற்றவர்களை மதித்து நடக்கும் மனநிலையையும் தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவத்தையும் குருபக்தி ஏனும் சிறந்த பண்பையும் பொறுமை என்கின்ற மிகப்பெரிய பொக்கிஷத்தையும் தரும் என்பது மறுக்கமுடியாத உண்மை**

கொடுக்கப்படுவதில்லை.

இது இலங்கை பூராகவும் காணப்படும் பிரச்சினையாகும். இதைப் பெற்றோர் ஒழுங்கான முறையில் அமைத்துத் தருவார்கள் என்றால், மேலும் மாணவர்கள் சிறந்த முறையில் பரதநாட்டியத்தில் இன்னும் சிறந்து விளங்க வாய்ப்பாக இருக்கும்.

வளர்ந்து வரும் மாணவ சமுதாயமும் பரதநாட்டிய பாடத்தின் தார்ப்பரியத்தை அறிந்து, அதற்கு மதிப்பு அளிக்க வேண்டும். எப்பொழுதும் கலையை நாம் அர்ப்பணிப்போடும் நிறைவான மனநிலையுடனும் கற்றால், அது எம்மை ஓர் உயரிய இடத்தில் கொண்டு சென்று வைக்கும் என்பது, காலத்தால் அழிக்க முடியாத உண்மையாகும்.

நடனப் பயிற்சியின்போது, கசிந்துவரும் ஒவ்வொரு வியர்வைத் துளியும் எம்மைச் சிகரமேற்றும் என்பதை நாட்டியம் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரும் மனதில் பதித்துக்கொள்ள வேண்டும்.

இடறி விழுந்த ஒவ்வொரு பொழுதிலும், இமயமளவு அனுபவங்கள் கிடைக்கப்பெறும். எனவே, இனி வரும் சமுதாயம், ஏற்படும் தோல்விகளைப் படிக்கற்களாக மாற்றி, வெற்றி பெறவேண்டும்.

இக்கட்டுரையாசிரியரான என்னுடைய வாழ்க்கையில், பரதநாட்டியம் பல மாற்றங்களை ஏற்படுத்தி, நன்மை அளித்து இருக்கிறது. பத்து ஆசிரியர்களால் வளர்க்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டிருந்தேன். அதற்குக் காரணம், சற்று முந்திய காலத்தில், நிலவிய நடன ஆசிரியர்கள் தட்டுப்பாடும், பாடசாலைகளில் நடன ஆசிரிய இடமாற்றமும் ஆகும். இருந்தும் எனக்குக் கிடைத்த ஆசிரியர்கள், எந்த விதத்திலும் தேடிக்கற்பதற்குத் தடை விதிக்கவில்லை. அதனால், பல விதமான அபிநய முறைகள், தாளப்பிடிப்புகள் என்பவற்றை அறிய வாய்ப்பாக இருந்தது. எங்கு சென்றும் கற்கலாம்; யார் எழுதிய புத்தகங்களைப் படிக்கலாம் என்று ஊக்கப்படுத்தியதும் நான், பல்கலைக்கழகம் செல்ல உதவியாக இருந்தது. என்னுடைய வாழ்க்கையில், சந்தித்த ஆசிரியர்கள் எனக்குக் கிடைத்த பெரும் வரம் என்றுதான் கூற வேண்டும். அனைத்து மாணவர்களுக்கும் இந்த வாய்ப்பு அவர்களின் ஆசிரியர்களால் கிடைக்குமா என்பது தெரியாது. ஆனால், கிடைத்தால் அது பெரும் பேறு; இன்னும் நன்மை பகிர்க்கும். பரதக்கலை, மனதில் குழப்பம் இல்லாமல் ஓர் அமைதியான மாற்றத்தையும் பெருமை, பொறாமை அற்ற எண்ணத்தையும் மற்றவர்களை மதித்து நடக்கும் மனநிலையையும் தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவத்தையும் குருபக்தி எனும் சிறந்த பண்பையும் பொறுமை என்கின்ற மிகப்பெரிய பொக்கிஷத்தையும் தந்து இருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

தமிழ் மரபு தோன்றிய காலத்தில் இருந்து, பரதக்கலையானது எம்முடன் பின்னிப் பிணைந்துள்ளது என்பதற்கு, புராதன மன்னர்களின் வரலாற்று சான்றுகளும் மூத்த நடனக் கலைஞர்களின் வழிகாட்டல்களும் பேருதவியாக இருக்கும். இத்தகைய சிறப்புகளும் பேறுகளும் நிறைந்த பரதக்கலையை, பேணிப் பாதுகாத்து, எமது அடுத்த சந்ததிக்கும் எடுத்துச் சென்று, அழியவிடாது, பாதுகாத்து நிற்க வேண்டும் என்பது, தற்கால கலைஞர்கள் ஒவ்வொருவரின் மாபெரும் கடமையாகும். அத்துடன், சபையில் ஒவ்வொருவரின் கைதட்டலுமே மேலும் கலைஞர்களை ஊக்கப்படுத்தும்! இதை ஊக்குவிப்பது, பெற்றோரினதும் பொது மக்களினதும் கடமை ஆகும். எனவே, கலையைச் சிறப்பிக்க, அனைத்து நடன கலைஞர்களுக்கு இடையிலும் போட்டி பொறாமை இன்றி, ஒற்றுமையுடன் செயற்படுவது காலத்தின் கட்டாயம் ஆகும்.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் சனிக்கிழமை, 07 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.